பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 18 வியாழக்கிழமை (31.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :125

### ஆழிப்பேரலை நிவாரணம் வழங்கவில்லை என்று

## இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நாவில் தமிழர்கள் முறைப்பாடு

ஜெனீவா,மார்ச்31

ஆழிப்பேரலையால் இலங்கை பாதிக்கப்பட்டதும் சர்வதேச சமூகம் உடனடியாக வழங்கிய உதவிகளை இலங்கை அரசு தமிழ் மக்களுக்குப் பகிர்ந்தளிக்காதது ஒரு மனித உரிமை மீறல் என்று ஐ.நாவில் முறையிடப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் தமிழர் உரிமை மையத்தால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடர் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது. அதன் தலைவரான. ஐ.நாவுக்கான இந்தோனேஷியத் தூதுவர் மக்கர் விப்பிசோனிடம் தமிழர் மனித உரிமைகள் மையப் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் முறைப்பாட்டு மனுவைக் கையளித்தார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி முத்திரை விவகாரம்: மயிலிட்டி மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

மயிலிட்டியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள சுனாமி நிவாரண முத்திரையில் புள்ளிகள் வெட்டப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது என்றும் -

இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் - மயிலிட்டிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் - ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட - தம்முடன் பேச்சு நடத்திய யாழ். மாவட்டச் செயலகத்திட்டப் பணிப்பாளர், வெட்டப்படவிருந்த 16 புள்ளிகளில் 4 புள்ளிகளை தருவ

(16ஆம் பக்கம் பார்க்க)

# மின்சார, பெற்றோலியத் துறைகளின் பிரச்சினையைத் தீர்க்கக் காலக்கெடு!

## இணக்கம் இன்றேல் முன்னைய திட்டத்தை முன்னெடுப்பதில் அரச உயர்பீடம் உறுதி

கொழும்பு,மார்ச்31

**இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கு விற்பனை ஆகியவை தொடர்பாக எழுந்திருக்கும் சர்ச்சைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு ஒருவார காலக்கெடுவை விதித்திருக்கும் அரசு, அதற்குள் இணக்கம் ஏதும் எட்டப்படாவிட்டால், இது தொடர்பாகக் கிளப்பப்பட்டுள்ள ஆட்சேபனைகளைக் கருத்தில் கொள்ளாமல் புறக்கணித்துவிட்டு, தமது உத்தேசத் திட்டங்கள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் அங்கீகரித்து மேல் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.**

இந்த இரு விடயங்களும் தனியார் மயப்படுத்தல் நடவடிக்கைகள் எனத் தெரிவித்து அவற்றை அரசுப் பங்காளிகளான ஜே.வி.பியினரும், மேற்படி இரு துறைகள் சார்ந்த தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் கடுமையாக எதிர்த்துவருகின்றனர் என்பது தெரிந்ததே.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பதற்காக கடந்த திங்கட்கிழமை கூட்டப்படவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் பல தரப்புகளிலுமிருந்து இந்த விவகாரம் தொடர்பாக எழுந்த கடும் எதிர்ப்புகளை அடுத்து ரத்துச் செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் பேச்சுநடத்தி இணக்கப்பாட்டுக்கு வருமாறு ஜனா

(16ஆம் பக்கம் பார்க்க)

## பின்லாந்தில் புலிகளின் குழு!

லண்டன்,மார்ச்31

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பின்லாந்துக்கு விஜயம் செய்தனர். பின்லாந்தின் வெளியுறவுத்துறை அமைச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ.சாதாரணதர பெறுபேறு அடுத்தவாரம்

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வார இறுதியில் வெளியிடப்படவுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகளைக் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியை இலக்குவைத்து ஏறாவூரில் நேற்றுத் தாக்குதல்

ஏறாவூர்,மார்ச்31

ஏறாவூர் - ஆறுமுகத்தான் குடியிருப்புப் பிரதேசத்தில் வைத்து ஈ.பி.டி.பி. இயக்க முக்கியஸ்தர்கள் பயணஞ்செய்த வாகனம் மீது நேற்றுப் பிற்பகல் சரமாரியான துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்தார். ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மிக விரைவில் சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை ஆரம்பிப்போம் என்கிறார் வைத்தியநிபுணர் ரவிராஜ்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ். பல்கலைக்கழகப் பேரவையினால் அமைக்கப்பட்ட நடவடிக்கைக்குழு எமக்கு சில உறுதி மொழிகளை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் நாம் விரைவில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை மீள ஆரம்பிக்கவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ்.

நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் விடுதியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சத்திரசிகிச்சை நிபுணர் குணானந்தனை பல்கலைக்கழகத்திலிருந்து விடுவிப்பது தொடர்பாக நிபந்தனைகள் எதனையும் நாம் விதிக்கவில்லை. அவர் ஒரு நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர். யாழ். போதனா வைத்தியசாலையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தமிழ்ப் பகுதிகளில் 2 ஆவது நாளாக நேற்றும் ஹர்த்தால்

கல்முனை,மார்ச்31

அம்பாறை, திருக்கோவில் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதேசங்களில் நேற்றுப் புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால், கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, நாவிதன்வெளி, காரைதீவு, திருக்கோவில், ஆலையடிவேம்பு போன்ற தமிழ்க் கிராமங்களில் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

.கல்முனை நகரில் அரச, தனியார் வங்கிகள்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவபீட மாணவர்கள் இன்று விரிவுரைக்குத் திரும்புவர்

யாழ்ப்பாணம்,மார்ச்31

இடைநிறுத்தப்பட்ட சத்திரசிகிச்சைக் கற்கை நெறியை மீண்டும் ஆரம்பிக்குமாறுகோரி வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த மருத்துவபீட இறுதி வருட மாணவர்கள் இன்றுமுதல் விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பர்.

யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் தலைவர் த.காண்டீபன் நேற்றிரவு இதனை அறிவித்துள்ளார்.

இதுவிடயமாக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

இறுதிவருட சத்திரசிகிச்சைக் கற்கைநெறி தொடர்பாக துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் நடவடிக்கைக் குழுவின் அங்கத்தவர்கள், யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் நேற்று ஒன்றுகூடி கூட்டம் ஒன்றை நடத்தினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கை; ஏப்.3 முதல் துரிதப்படுத்தப் பணிப்புரை

### நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,மார்ச்31

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவராண மற்றும் மீள்குடியேற்ற வசதிகள் மேற்கொள்ளப்படுவது தாமதமாக இடம்பெறுவதாகக் குறைகூறியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, இந்த விடயத்தில் தலையிட்டு துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதியமைச்சர் சரத் அமுனுகமவைப் பணித்துள்ளார். நேற்றிரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் சில மணி நேரமே

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை முகாமில் தடுத்துவைத்திருந்த இருவர் காணாமற்போனதை ஒப்புக்கொண்டார் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம்,மார்ச்31

அரியாலைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட இருவர் படை முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் காணாமற்போயினர் என்பதை இராணுவக் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இரண்டு ஆள்கொணர்வு மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பிரதிவாதியாக மன்றில் சமுகமளித்திருந்த கோப்ரல் ராஜபக்ஷ இதனை ஏற்றுக்கொண்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதிவாளர் விடயத்தில் ஊழியரோடு சேர்ந்து போராடுவதற்கு மாணவர் ஒன்றியம் முடிவு!

யாழ்ப்பாணம்,மார்ச்31

பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் தொடர்பான விவகாரத்தில் பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்துக்கு மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

பதிவாளரின் விவகாரத்தில் பேரவை எடுத்த நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவதற்கு துணைவேந்தருக்கு இன்று வியாழக்கிழமை வரை அவகாசம் ஒன்றையும் மாணவர் ஒன்றியம் விதித்திருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பதிவாளரின் 'மோசடி' என்பது பல்கலைக்கழகத்தின் பொதுவான பிரச்சினை என்று தெரிவித்துள்ள மாணவர் ஒன்றியம், பதிவாளர் விடயத்தில் பல்கலைக்கழகப் பேரவை எடுத்த நடவடிக்கைகளை துணைவேந்தர் மாணவர்களுக்கு 31.03.2005 இற்கு முன்பாக, மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விளக்கவேண்டும் என்றும் கேட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் கல்விக்காக ஊழியர் சங்கம் தனது போராட்டத்தை இடைநிறுத்தி மாணவர் நலனுக்கு உதவ வேண்டும். பதிவாளரை மீண்டும் பதவியில் அமர்த்த நிர்வாகம் முயற்சித்தால் ஊழியர்களோடு சேர்ந்து மாணவர்களும் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவர் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச்31

இலங்கை மின்சார சபையின் கொக்குவில் பணிமனையில் கடமையாற்றிய பொறியியல் உதவியாளர் எஸ்.ரி. கணநாதன் ஒய்வுபெற்றதையிட்டு சேவைநலன் பாராட்டு விழாவும், பிரியாவிடை வைபவமும் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கொக்குவில் மின் அத்தியட்சகரின் தலைமையில் பிற்பகல் 4.30 மணிக்கு இலங்கை மின்சாரசபையின் கொக்குவில் பணிமனையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மின்சாரசபையின் வடபிராந்திய இணைப்பதிகாரி எஸ். முத்துரட்ணாணந்தம் உட்பட மின் பொறியியலாளர்கள், மின்பொறியியல் உதவியாளர்கள், மின் அத்தியட்சர்கள், ஊழியர்கள் எனப் பலர் பாராட்டுரையாற்றவுள்ளனர்.

(ஐ-12)

## தென்மராட்சியில் நடந்த
## மோ.சைக்கிள் விபத்துக்களில் சிக்கி நேற்று மட்டும் நால்வர் படுகாயம்

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி நான்கு பேர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கில்களால் மோதுண்டு கச்சாயைச் சேர்ந்த சி.வேணுகோபால்(வயது-9), மசாலையைச் சேர்ந்த யோ.செல்லம்மா (வயது-71) ஆகியோரும், வதியின் குறுக்கே ஓடிய பிளளையைக் காப்பாற்ற மோட்டார் சைக்கிளைச் சடுதியாக நிறுத்தியபோது தூக்கி வீசப்பட்டதில், சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த சு.கிறிஸ்தோப்பர் (வயது-63) என்பவரும் மோட்டார் சைககிள் சில்லுக்குள் ஆடை சிக்கியதால் கீழே வீழ்ந்ததில் தாதிய உத்தியோகத்தரான கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் பரமேஸ்வரி (வயது-51) ஆகியோரும் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். பின்னர் இவர்களில் வல்லிபுரம் பரமேஸ்வரி என்பவர் தலையில் காயமடைந்ததால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (எ-117-31)

## அரசசார்பற்ற நிறுவனங்கள் குறித்து விசாரிக்க நாடாளுமன்றக்குழு!

கொழும்பு,மார்ச்31

இலங்கையில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அவற்றின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்கக் கோரும் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்கவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தப் பிரேரணைக்கு அமைச்சர்களான தனேஷ் குணவர்த்தன, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரும் ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

இடர் முகாமைத்துவ ஏற்பாடுகள் தொடர்பிலான நாடாளுமன்றத்தின் விசேட குழு மேற்படி பிரேரணைக்கு முழுமையான ஆதரவை வழங்குமென்று அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

(எ-க)

## சுதேச மருத்துவர்கள் கலந்துரையாடல்

சுதேச மருத்துவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10.20 மணியளவில் தமிழீழ நிர்வாக சேவையின் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் ச.விக்கிரமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுதேச மருத்துவத்தை வளர்த்தெடுப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், சுதேச மருத்துவ நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த சுதேச மருத்துவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.(எ-12)

## ஜே.வி.பியின் எம்.பி. தொலைபேசியில் 'சுடர்ஒளி' ஆசிரியருக்கு அச்சுறுத்தல்

'சுடர்ஒளி' ஆசிரியருக்கு தொலைபேசி மூலம நேற்று அச்சுறுத்தும் பாணியில் மிரட்டல் விடுத்தார் ஜே.வி.பியின் ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன்.

நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் 'சுடர்ஒளி' ஆசிரியர் பீடத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட அவர், நேற்றைய 'சுடர் ஒளி' ஆசிரிய தலையங்கம் தொடர்பாக ஆசிரியரோடு தாம் உரையாடவேண்டும் எனக் கோரினார்.

அதனையடுத்து, அவரோடு ஆசிரியர் தொலைபேசியில் உரையாடினார்.

'என்ன நீங்கள் ஜே.வி.பியை மோசமாக விமர்சிக்க முடிவு எடுத்துவிட்டீர்களா?' - என்ற கடுந்தொனியுடன் ஆரம்பித்த அவர் ஆசிரியரைப் பதிலளிக்கவிடாமல் வாங்குவாங்கென்று வாங்கினார்.

'சுடர்ஒளியின்' முடிவு என்னவாகவும் இருக்கட்டும் 'சுடர்ஒளி' செய்தியில் ஏதேனும் தவறு இருப்பதாகத் தங்களுக்குத் தோன்றினாலும் அதை எழுத்தில் அனுப்புங்கள் உங்கள் கருத்தில் நியாயம் இருந்தால் - அது பிரசுரிக்கத் தகுந்ததாக இருந்தால் - அந்தப் பக்கக் கருத்தும் பிரசுரிக்கப்படும். கறுப்பு, வெள்ளையில் - எழுத்தில் - பிரசுரமான எங்களின் செய்திக்கு தங்கள் தரப்பில் ஆட்சேபம் இருந்தால் எழுத்தில் தருவதுதான் முறை. தொலைபேசியில் சத்தமிட்டு அச்சுறுத்துவது அல்ல வழி" - என்று ஆசிரியர் பதிலளித்தார்.

நீங்கள் மறுப்புரைகளைப் பிரசுரிக்க மாட்டீர்கள். நாங்கள் எழுதிக் களைத்ததுதான் மிச்சம்" என்றார் சந்திரசேகரன்.

அப்படி நீங்கள் கூறுவது முற்றிலும் தவறு. உங்களின் மறுப்புகள் பிரசுரிக்கத் தகுந்தவையா என்று பரிசீலிக்கக் கூட நீங்கள் எமக்குச் சந்தர்ப்பம் தரவில்லை. செய்தியாளர் மாநாடுகளுக்குக் கூட எங்களுக்கு (சுடர்ஒளிகசூ) நீங்கள் அழைப்பு அனுப்புவதில்லை, அனுமதிப்பதில்லை.

ஒரு மறுப்பைக் கூட எழுத்தில் தராமல் அவற்றை நாம் பிரசுரிக்கமாட்டோம் என்று நீங்கள் கற்பனையில் கூறுவது பொருத்தமற்றது. எப்போது, எந்த விடயத்தை - எமக்கு விளங்கக் கூடிய தமிழ் அல்லது ஆஙகில மொழியில் - அல்லது சிங்கள மொழியிலாவது அனுப்பிவைத்தீர்கள் என்று கூறமுடியுமா? - எனப் பதில் கேள்வி எழுப்பினார் 'சுடர்ஒளி' ஆசிரியர்.

அதற்குப் பதிலளிக்க முடியாத அவர் 'நீங்கள் புலிகளின் வாலைப் பிடித்துக்கொண்டு அளவுக்கு அதிகமாகத் துள்ளிக் குதிக்கின்றீர்கள். ஜே.வி.வியை விமர்சிக்கலாம். அதற்காக பத்திரிகை விபசாரம் செய்யமுடியாது. உங்கள போக்குக்காக நாளை உங்களுக்கு என்ன நடக்கப்போகின்றது என்று தெரியாமல் அதிகம் ஆடாதீர்கள்!' என்று கடுமையாகப் பாய்ந்தார்.

அவரின் பேச்சுத்தொனி எல்லைமீறி கடுமையானதால் வேறுவழியின்றி தொலைபேசி அழைப்பைத் தானாகத் துண்டித்துக்கொண்டார் 'சுடர்ஒளி' ஆசிரியர்.

ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்ட கட்சி ஜே.வி.பி. என அதன் தலைவர்கள் கூறிக்கொள்ள, அதன் எம்.பிக்களில் ஒரேயொரு தமிழரான இ.சந்திரசேகரன் மட்டும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை - அதுவும் அதன் ஆசிரியரை - அச்சுறுத்தும் பாணியில் தொலைபேசியில் இப்படி மிரட்ட முயல்வது வேடிக்கைக்கு உரியது. (எ-க)

# அடிக்கடி நடக்கும் போராட்டங்களால் மாணவர் கல்விச்செயற்பாடுகள் பாதிப்பு

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.பல்கலைக்கழக நிர்வாக அலகுகள் அடிக்கடி போராட்டங்களால் ஸ்தம்பித்துப் போவது மாணவர்களது கல்விச்செயற்பாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனினும், நியாயமான தொழிற்சங்கப் போராட்டத்திற்கு எந்த வகையிலும் மாணவர் சமூகம் எதிராக நிற்கப்போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுவரும் ஊழியர் போராட்டம், மருததுவபீட மாணவர்களின் போராட்டம் தொடர்பாக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

30.03.2005 அன்று மாணவர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் காலை 10.30 மணிக்கு கூட்டப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் மாணவர்களது கல்விநிலை பாதிக்கப்பட்டது தொடர்பாகவும், நீண்ட நாள்களாக தமது கல்வியை தொடரமுடியாமல் இருக்கின்ற மருத்துவபீட மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும்பொருட்டு கூட்டம் கூட்டப்பட்டது.

பல்கலைக்கழகமானது மாணவர்களது சொத்து, எமது கல்விக்காகவே அனைத்து நிர்வாக அலகுகளும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எமக்காக உருவாக்கப்பட்ட நிர்வாக அலகுகள் அடிக்கடி போராட்டங்களை முன்னெடுப்பதால் பாதிக்கப்படுவது மாணவர்களும் அவர்களது கல்விச் செயற்பாடுகளும் தான்.

உண்மையில் எந்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் மாணவர்கள் எதிரானவர்களல்லர். என்ன பிரச்சினை என்றாலும், மாணவர் ஒன்றியத்திடம் கதைத்து, போராட்டத்தினை முன்னெடுக்கவேண்டும். நியமான தொழிற்சங்க போராட்டத்திற்கு எந்த வகையிலும் மாணவர் சமூகம் எதிராக நிற்கப்போவதில்லை. பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் போராட்டமானது நியாயமானது. ஒரு மோசடிக்குற்றத்தினை மேற்கொண்ட நபரை உள்வாங்க நிர்வாகம் முற்படுவ்து எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. முன்னாள் பதிவாளர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாகவும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவுகள் தொடர்பாகவும் இது தொடர்பான பல்கலைக்கழகப் பேரவையின் நிலைப்பாடு தொடர்பாகவும் மூத்த பேராசிரியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மத்தியில் விளக்கத்தினை அளிக்க துணைவேந்தர் பின்நிற்பது ஏனென்று யாருக்கும் புரியாத ஒன்றாக உள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினை சரியான வழியில் நெறிப்படுத்த வேண்டும். எமது மாணவர்களின் கல்வியை சீரான பாதையில் இட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணக்கரு துணைவேந்தருக்கு இருக்குமென்றால் உரிய பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வினை எட்டியிருப்பார். துணைவேந்தருடைய நழுவல் போக்குகள் எமது மாணவர் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கிறது. எமது பல்கலைக்கழக நிர்வாகத்தினை கட்டிவளர்க்க வேண்டிய பொறுப்பும் துணைவேந்தருக்குத்தான் உண்டு. இதனை விடுத்து பல்கலைக்கழக பேரவையின் முடிவு என்று பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான தவறான முடிவுகளை துணைவேந்தர் எடுப்பது ஒட்டு மொத்த நிர்வாகத்திற்கும் இழுக்காகவே அமையும். இத்துடன், பல்கலைக்கழகத்தில் உயர் மட்டத்தில் நிர்வாகத்தினை சீர்படுத்தவேண்டிய பேரவையின் சில தவறான முடிவுகள் பேரவை மீது மாணவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும் சீரழிக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் பேரவையின் சில முடிவுகளை மாணவர்கள் ஏற்கமுடியாது என்று இன்றைய கூட்டத்தில் தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். குறிப்பாக எமது பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் எமது பேராசிரியர்கள் தவிர்ந்த ஏனைய 12 நபர்களில் சிலர் பல்வேறு அரசியல் செல்வாக்கிற்கு மத்தியில் பல்கலைக்கழகத்துடன் தொடர்பற்றவர்களாக, பேரவையில் இருப்பதால் அவர்களூடாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எமது பல்கலைக்கழக செயற்பாட்டிற்கு ஆக்கபூர்வமாக இருக்குமா என்பது தான் எமது நிலைப்பாடு.

குறிப்பிட்டுச் சொன்னால் ஒரு சில பேரவை உறுப்பினர்கள் அரசியல் சக்திகளின் சிபாரினால் உள் நுழைந்தவர்கள் இப்படியான அரசியல் இலாபத்திற்காக உள்நுழைந்தவர்கள் தமது அரசியல் இலாபத்திற்காகவே பல்கலைக்கழக பேரவையையும் பயன்படுத்த நினைப்பார்களே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க, மாணவர்களுக்காக செயற்படுவார்களா? என்பது பிரதான கேள்வியாகும். ஏனென்றால், குற்றம் இழைத்த ஒரு பதிவாளரை மீள எடுப்பதற்கு பல்கலைக்கழக பேரவை முனைகின்றது என்பதிலிருந்து ஒன்றை விளங்கிக்கொள்ள முடிகின்றது. அதாவது, ஒரு நிறுவனத்தில் இருக்கின்ற மோசடிகளை அகற்ற வேண்டிய பேரவை, அதற்குத் துணைபோய், அதனை வளர்க்க முற்படுவது எந்தவகையில் நியாயமான முடிவாக அமையும்? எனவே, பலகலைக்கழக பேரவை எடுக்கின்ற முடிவுகள் எப்போதும் நியாயமானதாக, முன்மாதிரியான போக்காக அமையவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அத்தோடு தற்போது இருக்கின்ற பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வினை ஏற்படுத்தி மாணவர்களது இயல்பான கல்வி செயற்பாட்டிற்கு துணைவேந்தர் உட்பட உயர் மட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு, மருத்துவபீட மாணவர்களின் பிரச்சினைகளும் விரைவாக தீர்க்கப்படவேண்டும். அவர்களது கல்விச்செயற்பாடும் மீள ஆரம்பிக்க அதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதனை வலியுறுத்துகின்றோம்.

இவற்றினைக் கருத்திலெடுக்காமல், நிர்வாகம் அசமந்தப் போக்கினையே தொடருமாக இருந்தால் மாணவர்கள், நிர்வாகத்திற்கு எதிரான போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என்பதனையும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நியாயத்தைத் தேடும் ஊடகப் பாய்ச்சல்

தமது நியாயமான உரிமைகளுக்காகவும் தமது இனத்தின் இருப்புக்காகவும் ஈழத் தமிழர்கள் கடந்த ஐந்து தசாப்த காலமாகப் போராடி வருகின்றார்கள். இந்தப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க இலக்கை - முன்னேற்றத்தை - அவர்கள் எட்டியுள்ளார்கள். இருந்தும், இந்த முயற்சியில் அவர்களுக்கு ஏற்பட்ட பல பின்னடைவுகளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது ஒரு விடயம்தான். அவர்களின் போராட்டத்தின் நியாயம் - நீதியின் பக்கம் - உண்மை நிலை - சர்வதேச சமூகத்துக்குச் சரிவர எடுத்தியம்பப்படாமல் மறைக்கப்பட்டதே அந்தக் குறைபாடு.

காலங்காலமாக ஈழத்தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, மேலாதிக்கம் செலுத்திவந்த சிங்களப் பேரினவாத அரசுகள் தங்களது அரச இயந்திரங்களின் வலிமையையும் செல்வாக்கையும் பயன்படுத்தித் தமிழர்களின் பக்கத்தில் உள்ள நியாயங்களை ஒளித்து - சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைச் செயற்பாடுகளை மூடிமறைத்து - சர்வதேச உலகுக்கு வித்தியாசமாகப் படம் போட்டு, விடயங்களைச் சித்திரித்து வந்தன. இதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக எழக்கூடிய சர்வதேச ஆதரவையும் கிளம்ப விடாமல் நசுக்கிவிட அவற்றால் முடிந்தது.

இதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கீழிருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் 1994 - 1995 இல் ஈழத்தமிழர்கள் நடத்திய சமாதானப் பேச்சுக்களை ஒட்டிய காலத்தில் கூட இத்தகைய மூடி மறைப்புகளே இடம்பெற்றன.

சமாதான தேவதையின் முகமூடி அணிந்துகொண்டு சமரசப் பேச்சுக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைதி முயற்சிகளில் நேர்மையுடன் - இதய சுத்தியுடன் - செயற்படவில்லை. ஒருபுறம் யாழ். குடாநாட்டின் மீதான இராணுவ ஆக்கிரமிப்புத் திட்டத்துக்கான ஆயத்தங்களை நாசூக்காகச் செய்துகொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை ஒட்டித் தமது அரசுத் தரப்பு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவுசெய்யாமல் இழுத்தடித்தார். அதன் மூலம் வேறு வழியின்றி யுத்தத்தை மீள ஆரம்பிக்கும் நெருக்கடிக்குள் புலிகளைத் தள்ளி அதன் வாயிலாகப் போரை வெடிக்க வைத்தார். யுத்தம் மீண்டும் மூண்டதும் அவர் என்ன செய்தார்?

அமைதி முயற்சிகள் விடயத்தில் தாமும் தமது அரசும் நடந்துகொண்ட விதத்தை - இரட்டைவேடப் போக்கை - நாசூக்காக மூடி மறைத்தார். அமைதிப் பேச்சுக்களில் ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகளாகப் பங்குபற்றிய விடுதலைப் புலிகளை சமாதான விரோதிகளாகவும், போர் வெறியர்களாகவும் சர்வதேச உலகுக்குச் சித்திரித்துக் காட்டும் பெரும் பிரசாரப் போரை வெற்றிகரமாக முன்னெடுத்தார்.

அந்த அமைதி முயற்சிகளின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு எவ்வளவு மோசமாக - அபத்தமாக - பாசாங்காக - நடித்து, நடந்து, தன்காரியத்தைச் சாதித்துக்கொண்டது என்பதை அப்போதைய அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பரிமாறப்பட்ட 45இற்கும் அதிகமான கடித ஆதாரங்களோடு தமது நூலான நயவஞ்சக அரசியல் (Politics of Duplicity) என்ற புத்தகத்தில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அம்பலப்படுத்தியுள்ளார்.

ஆனாலும், அப்போது சமாதான முயற்சிகள் முறிந்து போர் வெடித்தபோது ஜனாதிபதி குமாரதுங்கவினதும் அவரது அரசினதும் அடக்குமுறை முகம், போர்த் தீவிரப் போக்கு சர்வதேச சமூகத்தின் முன் அம்பலமாகவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளே போர் வெறியர்களாகச் சித்திரிக்கப்பட்டனர்.

தமிழர் தரப்பின் நியாயங்களையும், உண்மைகளையும் வெளிப்படுத்தும் - சர்வதேச மயப்படுத்தப்பட்ட - ஊடக வசதிகளோ, தொடர்பாடல் வாய்ப்புக்களோ தமிழர் தரப்புக்கு இல்லாமல் இருந்ததும், இலங்கை அரசுத்தரப்பு பலமான பிரசாரக் கட்டமைப்பை வைத்திருந்ததும் நிலைமையைத் தனக்குச் சாதகமாகவும் தமிழர் தரப்புக்கு எதிராகவும் திருப்புவதற்கு இலங்கை அரசுக்கு நன்கு உதவின.

"நீதி செய்யப்படுவது மட்டுமல்ல, செய்யப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்" என்பார்கள். அதை சற்று மாற்றினால் "நியாயம் இருப்பது மட்டும் போதாது; அது வெளியில் காட்டப்படவும் வேண்டும்."

தமிழர் தரப்பின் நியாயங்களைச் சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்தும் ஊடக வசதிகளை உருவாக்குவது இந்த வகையில் முக்கியமானதாகும்.

தமிழ் மண்ணில் தேசிய ஒளி ஊடகமாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிச் சேவை (என்.ரி.ரி) இவ்வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பது இந்த ரீதியில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். தமிழர் தரப்பின் உண்மை நிலைமையை - நியாயத்தை - சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கும் முயற்சியில் ஒருவரவேற்கத்தக்க பாய்ச்சலாகவும் இது அமைகின்றது.

இலங்கைத் தீவிலிருந்து வெளியுலகுக்கு - தென்னிலங்கையின் ஏற்பாடுகள், வசதிகள் தொழில்நுட்பங்களில் தங்காமல் - ஊடகத் தொலைத்தொடர்பு ஒன்றை, அதுவும் அசையும் படிமங்களின் ஊடான இலத்திரனியல் ஊடக வசதியை ஏற்படுத்தி, அதனை விஸ்தரித்துக் கொள்வது உரிமைக்கும் நியாயத்துக்குமான தமிழர்களின் தேடலிலும், போராட்டத்திலும் ஒரு புதிய பரிமாணத்தைத் தரப்போகின்றது என்பது நிச்சயம்.



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் உதவியுடன் இயங்கிவரும் வடமராட்சி, வலிகாமம் கிழக்குப் பிரதேசங்களில் இயங்கும் 87 முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை. சத்தியசீலன் உரையாற்றுவதையும் வல்வை சிதம்பராக் கல்லூரி அதிபர் ந.அரியரத்தினம், 'சைவன்' அமைப்பைச் சேர்ந்த எஸ்.நவரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# கோப்பாயிலும் வடமராட்சியிலும் மாவீரர் வித்துடல்கள் விதைப்பு

கோப்பாய்,மார்ச்31

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் கருணா குழுவினரால் வெட்டிக்கொலைசெய்யப்பட்ட லெப்டினன்ட் இறைமாறனின் (அருள்ராஜா சஞ்சஜன் - முனிகோவிலடி, இருபாலை கிழக்கு) இறுதி வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இருபாலை கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் ந.சிவகடாட்சம் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதன்மைச்சுடரை மாவீரரின் தந்தையார் அருள்ராஜாவும் நினைவுச் சுடர்களை சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கண்ணன், கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி சிவஞானசுந்தரம், அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஏற்றிவைத்தனர்.

நினைவுரைகளை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருதி, தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சொலமன் சூ. சிறில் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்பட்டு, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி, இராசவீதி ஆகிய வீதிகளூடாகக் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு இறுதிவணக்க நிகழ்வைத் தொடர்ந்து மாவீரரின் வித்துடல் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விதைகுழியில் விதைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெருமளவு போராளிகள், பொதுமக்கள் கலந்து மாவீரருக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை -

இவருடன் கூடவே வெட்டிக் கொலை செய்யப்பட்ட மேஜர் புகழமுதனின் (கிட்டினப்பிள்ளை சிவநேசன் புதுக்குளம் மத்தி, கரவெட்டி) இறுதி வணக்க நிகழ்வு நேற்று முனதினம் வடமராட்சியில் நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை இரவு கரவெட்டி இல்லத்தில் கொண்டுவரப்பட்ட மாவீரரின் பூதவுடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணிக்கு கரவெட்டி கிழக்கு கவுந்தில் மழலைகள் பூங்காவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனாவும் ஈகச் சுடரினை மாவீரர் புகழமுதனின் சகோதரர் இந்திரன் மாஸ்டரும் ஏற்றினர்.

மலர் மாலையை மாவீரரின் தாயார் சிவமணி கிட்டினப்பிள்ளை அணிவித்தார். மலர் அஞ்சலி நிகழ்வுகளை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இன்பன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி, கடற்புலிகளின் துணைத் தளபதிகளில் ஒருவரான செழியன், யாழ்.மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் செலுத்தி அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் பூதவுடல் வாகனத்தில் வடமராட்சி மாவீரர்துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் விதைகுழியில் விதைக்கப்பட்டது.

(ஐ-12-70-72)

# திருத்தப் பணிகளுக்காக மின்தடை

யாழ்ப்பாணம்,மார்ச்31

பிரதான மின் இணைப்புப் பாதையில் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காகக் குறிப்பிட்ட சில தினங்கள் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

உரும்பிராய், கோண்டாவில் மற்றும் பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களில் எதிர்வரும் 9ஆம் திகதியும் -

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் எதிர்வரும் 16ஆம் திகதியும் -

புன்னாலைக்கட்டுவன் அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் எதிர்வரும் 23ஆம் திகதியும் -

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களில் எதிர்வரும் 30ஆம் திகதியும் -

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களில் மே மாதம் 14ஆம் திகதியும்-

குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மே மாதம் 21ஆம் திகதியும் - மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

(ஒ-202)

# ஆசிரியரல்லாதோர் கற்பிப்பதற்குத் தடை

தென்மராட்சி,மார்ச்31

பாடசாலைகளில் அரசினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேலதிகமாக வேறுநபர்களைக் கொண்டு பாடசாலை நேரங்களில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகப் பாடசாலை அதிபர்களுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எந்தவொரு பாடசாலையிலும் பாடசாலை நேரத்தில் எந்தவொரு பாடத்திற்கும் அரசினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தவிர்ந்த வேறு நபர்களைக் கொண்டு கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இதற்காக மாணவர்களிடமிருந்து நிதி அறவிடுவதும் கல்வி அமைச்சினால் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கல்விச் செயற்பாட்டுக்காக மாணவர்களிடமிருந்து ஏற்கனவே நிதி அறவிட்டு வந்திருப்பின் அவற்றினை மீளளிப்பதற்குத் தாமதமின்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். பாடசாலை நேரத்தில் சகல மாணவருக்கும் இலவசக் கல்வியை வழங்குவது கட்டாயமாகும் - என்று அதில் உள்ளது. (ஒ-117)

## தந்தை சொல் கேட்க வாரீர்

இப்புவி ஈழம் வாழ்ந்த
இணையிலா தலைவர் எம்முள்
ஒப்பரும் ஒழுக்கம் நேர்மை
ஓ தரும் கல்வி ஞானம்
செப்பரும் ஒய்வ சிந்தை
சீர் பெறு கூட்ட ஞானம்
இப்படி உயர்ந்த தந்தை
இயம்பினார் அன்று ஒன்று
முப்பெரு இனமும் வாழ
முன்வைத்தார் சமஷ்டித் திட்டம்
எப்படி எமை ஆளவந்தோர்
ஏற்பரோ இதனை மண்மேல்?
இப்படி இதனை ஏற்றால்
இன்பப் பூங்காவாகும் நாடு!
அப்படி ஏற்காவிட்டால்
அடவியாய் மாறும் நாடு!
செப்பிய தந்தை வார்த்தை
செயற்பட விரைந்து வாரீர்.

- விகடகவி.

# உள்ளூராட்சித் தொழிலாளருக்கு பதவி உயர்வு வழங்கத் திட்டம்

தென்மராட்சி,மார்ச்31

உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 25ஆயிரம் தொழிலாளர்கள் பதவி உயர்வு பெறவுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையிடம் கோரி உள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வீதி அமைப்புத் தொழிலாளர்களே பதவி உயர்வு பெறவுள்ளவர்களாவர்.

தொழிலாளர்களின் சேவை மூப்பு அடிப்படையில் தரம் பிரித்து பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. இத்தகவலை அகில இலங்கை உள்ளூராட்சித் தொழிற் சங்கங்களின் சம்மேளன வடக்கு கிழக்கு இணைப்பாளர் செ.சந்திரகுமார் தெரிவித்தார்.

(ஒ-117)

## நாளை

*பங்குனி 19*
*வெள்ளிக்கிழமை*
*01.04.2005*
*திதி : ஸப்தமி*
*முன்னிரவு 6.44 வரை.*
நட்சத்திரம் : *மூலம்*
*முன்னிரவு 8.55 வரை.*
கரிநாள்
*சுபநேரம் : 6.11 - 7.41*
*ராகுகாலம் : 10.41 - 12.11*
*(யாவும் பழைய நேரப்படி)*

## உதயவாக்கு

நாம் அரைகுறையாக அறிவதையே அதிக உறுதியாக நம்பி விடுகிறோம்.

# EXPRESS RUBER STAMPS

யாழ். நகரில் முதன் முறையாக
அறிமுகமாகின்றது.




* ஒரே முத்திரையில் 5 வர்ணங்களில் -
* Ing pad இல்லாமல் -
* உங்கள் Photoக்கள். கையொப்பங்கள், நிறுவன இலட்சனைகளைச் சேர்த்தல் -
* பேனா, Key tag போன்ற அதிநவீன வடிவங்களில் மிகவும் தெளிவான பதிப்புக்கு இன்றே நாடுங்கள்!

**EXPRESS RUBER STAMPS**

(EXPRESS NET CAFE)
No.328, STANLY ROAD, JAFFNA.
T.P.: 222 7866.

(43683) (24-23-11-15)


# பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை பாரத் நிறுவனத்துக்கு விற்பதில் அரசு உறுதி

கொழும்பு,மார்ச்31

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றிலொரு பங்கினை இந்திய பாரத் எண்ணெய்க் கம்பனிக்கு விற்பதற்கு இலங்கை அரசு திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டது. அதேசமயம், இந்த விடயத்தால் ஆளுங்கட்சிக்குள் ஏற்படும் முரண்பாடுகளைப் பேச்சுக்களின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கும் அரசு முடிவுசெய்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

கொழும்பிலுள்ள இந்தியாவின் மூத்த இராஜதந்திரியொருவருடன் பெற்றோலியப் பங்கு விற்பனை குறித்து அண்மையில் கலந்துரையாடிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பங்குகளை இந்தியாவின் பாரத் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியளித்துள்ளார்.

அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி., அரசின் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இதனால் மேற்படி விடயத்தை உத்தியோகபூர்வமாகத் தீமானிப்பதை சில வாரங்களுக்கு ஒத்திவைத்திருக்கும் ஜனாதிபதி, இது குறித்து ஜே.வி.பி.யினருடன் பேசி உறுதியானதும் சாதகமானதுமான முடிவு ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு தனக்கு மிகவும் நெருக்கமானவரும், சிரேஷ்ட அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரைக் கேட்டுள்ளார் என்று தெரிகிறது.

இதற்கமைய அமைச்சர் கதிர்காமர் ஜே.வி.பி.தலைவர்களை விரைவில் சந்திக்கவுள்ளார். இதேவேளை, இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்புத் திட்டம் தாமதமாகும் என்பதால் அதுகுறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுக்களை நடத்துமாறு ஜனாதிபதி திறைசேரியின் செயலாளரைப் பணித்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-3)

# இலங்கை அரசு

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்கத்துக்கான அமைச்சு

வடகிழக்குப் புனர்வாழ்வு சம்பந்தமாக உலக வங்கியின் உதவியுடன்
செயற்படுத்தப்படும் திட்டம்
வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் - கட்டம் II
கடன் இல. 3935 C.E.

**தேசிய கூறுவிலை கோரல் (நிர்மாண வேலைகள்)**

## கேள்வி அறிவித்தல்

1. இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. பிரதித் திட்டப்பணிப்பாளர், வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் கிளிநொச்சி அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000.00ஐ காசாகக் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 15-04-2005ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | இக்ராட் தரம் |
|---|---|---|---|---|
| 01 | NEIAP-II/ KOC/RARCD - DOM /04 | கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கான விடுதி நிர்மாண வேலை | 95,000.00 | M 7 (கட்டடம்) அல்லது அதற்கு மேல் |
| 02 | KL/SS/04 | புதுமுறிப்புக் குளக்கட்டு புனருத்தான வேலை - கூறு I கண்டக்கல்லினால் அலைதாங்கி அமைத்தல் | 32,000.00 | M 8 (நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |
| 03 | KL/SS/05 | புதுமுறிப்பு குளக்கட்டு புனருத்தான வேலை - கூறு II கண்டக்கல்லினால் அலைதாங்கி அமைத்தல் | 32,000.00 | M 8 (நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |
| 04 | KL/SS/06 | பிரமந்தனாறு குளக்கட்டுப் புனருத்தான வேலை - கூறு I கண்டக்கல்லினால் அலைதாங்கி அமைத்தல் | 32,000.00 | M 8 (நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |
| 05 | KL/SS/07 | பிரமந்தனாறு குளக்கட்டு புனருத்தான வேலை - கூறு II கண்டக்கல்லினால் அலைதாங்கி அமைத்தல் | 32,000.00 | M 8 (நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |

4. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம், நீர்ப்பாசனத் திணைக்களம், வில்சன் வீதி, கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. இல.: 021 2285747 அல்லது 021 2283969
5. இல. (1) இற்கான வேலைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 91 நாள்களுக்குள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், பிரதித் திட்டப்பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, பிரதித் திட்டப்பணிப்பாளர், நியாப், நீர்ப்பாசனத் திணைக்களம், வில்சன் வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 02-05-2005ஆம் திகதி 15.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதார் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம்.
6. இல. (2), (3), (4), (5) இற்கான வேலைகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மீண்டு வரும் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் செய்யப்பட இருப்பதால், இவ்வேலைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 91 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வில்சன் வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 02-05-2005 ஆம் திகதி 15.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம்.
7. மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
8. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**ஏந்திரி அ.கி.வினோதராஜ்,**
பிரதித் திட்டப் பணிப்பாளர், நியாப்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சி.

(சி/41903) (24-23-11-15)

# 25ஆவது ஆண்டு
## திருமண நிறைவு விழா வாழ்த்து



கோட்டைக்காடு.
மல்லாகம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகத்தைச் சேர்ந்தவர்களான
**திரு.திருமதி**
**செல்வராஜா – சாரதா**
தம்பதிகள்
இன்று (31–03–2005) வளமுடன்
வாழ உளமார வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துபவர்கள்:**
திருமதி இ.பரமேஸ்வரி,
திரு.திருமதி குணலிங்கம் யோகேஸ்வரி,
திரு.திருமதி உதயமனோகரன் - சாந்தி (சுவிஸ்),
திரு.திருமதி பாஸ்கரன் திருஞானவதி,
திரு.திருமதி சாந்தலிங்கம் புஸ்பலதா,
திரு.திருமதி முருகமூர்த்தி சுஜாதா (பிரான்ஸ்),
திரு.திருமதி விஜயகுமார் திலகா (ஜேர்மனி),
திரு.திருமதி சசிகுமார் (சுவிஸ்),
இராஜேஸ்வரி,
செல்வி கவிதா.

(43689)(26-23-11-15) தகவல்: இராசையா குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கதிர்ப்பிள்ளை பாலசிங்கம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் 30-03-2005 புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கமலினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் செல்லமுத்து, குமாரசூரியர், ஆறுமுகம் சிவக்கொழுந்து (J.P. ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்), பூரணம் (லண்டன்), திசைவீரசிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கிருஷ்ணாநந்தம் (இலங்கை வங்கி 2 ஆம் கிளை, யாழ்ப்பாணம்), கிருஷ்ணகுமாரி (பிரதேச செயலகம் - கோப்பாய்), கிருஷ்ணகுமார் (உப அஞ்சல் அலுவலகம், உடுப்பிட்டி), கமலகுமார் (வர்த்தகர், குஞ்சர் கடை), கலைவாணி (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி), மதிவதனி (மாவட்ட நீதிமன்று, மல்லாகம்), உமா (பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.அருந்தவராணி (வலி.கிழக்குப் பிரதேச சபை), சிவச்சந்திரதேவன் (மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்), மனோரஞ்சினி (யா/டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி), புஸ்பகுமார் (கொழும்பு), சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜிஸ்ணவன், சுகநிதன், சமாஹிதன், சைந்தவி, தர்ஜனி ஹிதன், கம்ஸப்பிரியா, அபீஷ்டகன், ராகப்பிரியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-03-2005) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலஷிமி பவனம்*
*(பழைய விதானை வளவு),*
*பண்டகை, உடுப்பிட்டி.*

தகவல்:
கமலினி (மனைவி).

(43691) (24-23-11-15)

## முத்துத்தம்பி பொன்னம்பலம்

(இளைப்பாறிய பிரதி தொழில்
ஆணையாளரும்
ஆராய்ச்சி உத்தியோகத்தரும்)



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி பொன்னம்பலம் 29.03.2005 அன்று நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும், டாக்டர் செல்வராணியின் அன்புக் கணவரும் அன்னா, பாரதி, சாதனா, தீபனா, தர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரனி ஜெயராஜ், தெரோனின் அன்பு மாமனாரும் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளையதம்பி பொன்னம்மா மற்றும் தங்கமுத்து ஆகியோரின் மருமகனும் ஏரம்பு, இராசமணி பொன்னம்மா, செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரும் பத்மவதி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை, சதாசிவம், மகாலட்சுமி, தியாகராசா, சிவயோகலட்சுமிதேவி மற்றும் கைதடியைச் சேர்ந்த நடராசா, தியாகராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நியூஸிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாவடிப்பிள்ளையார் வீதி,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
*நியூஸிலாந்து*
*T.P: 006496290665*

தகவல்:
பெ.சதாசிவம் (மைத்துனர்)
மு.ஏரம்பு,
மு.செல்லத்துரை (சகோதரர்),
ந .தியாகராசா (மைத்துனர்).

(சி41902)(33-21-11-15)

கரைதுரைப்பற்று உடற்பயிற்சிப் போட்டி:

# கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரு பிரிவுகளிலும் கோட்டச் சம்பியன்

புதுக்குடியிருப்பு,மார்ச்31

கரைதுரைப்பற்று கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் கொக்கிளாய் அ.த.க. பாடசாலை கோட்டச் சம்பியனானது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா தேசியக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து மங்களவிளக்கை வித்தியானந்தாக் கல்லூரி, வற்றாப்பளை ம.வி. ஆகியவற்றின் அணித்தலைவர்கள் ஏற்றினர்.

வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மைக்கல் திலகராசா போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**ஆண்கள்**

கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, வற்றாப்பளை ம.வி., முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி.

**பெண்கள்**

கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, குமுளமுனை ம.வி. (3-353)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்: பலமான அணிகள் இன்று களத்தில்!

யாழ்ப்பாணம்,மார்ச்31

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பலமான அணிகள் இன்று மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - யங்கென்றீசியன்ஸ் வி.க. எதிர் காளியம்பாள் வி.க.

★ மாலை 5 மணி - இளம்தென்றல் வி.க. எதிர் முல்லை வி.க. (3-86)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்கள் இரண்டும் மிகவும் விறுவிறுப்பாக உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தன.

ஆட்டநேரம் முடிவடையும் நேரம்வரை பார்வையாளர்களை - அடுத்த வினாடி எந்த அணி கோல்பெறும் என்று - ஆவலைத் தூண்டும் வகையில் ஆட்டங்கள் அமைந்திருந்தன.

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த நவசக்தி விளையாட்டுக் கழகத்திற்கும் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே முதலில் ஆட்டம் இடம்பெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளின் வீரர்களும் மிகவும் வேகமாக விளையாடிக்கொண்டு இருந்தார்கள். அவ்வேளையில் எதிரணிகளைச் சேர்ந்த வீரர்கள் இருவர் தொடர்ச்சியாகத் தமக்குள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து இரு வீரர்களும் மத்தியஸ்தரினால் நட்புரீதியாக விளையாடும்படி விநயமாக அறிவுறுத்தப்பட்டனர்.

உதயன் ஊடக அனுசரணை

முதல் பாதி ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்கையில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக மத்தி முன்னணி வீரர் சைலேஸ் தனக்குக் கிடைத்த பந்தை வலது பக்க முன்னணி வீரருக்குத் தட்டிக்கொடுக்க, ஆதரவைப் பெற்ற தர்சன் எதிரணியின் கோல் கம்பத்தினுள் அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இரு அணியின் ஆதரவாளர்களுக்குமிடையில் உற்சாகம் அதிகரித்தது. தொடர்ந்து இரு அணிகளின் வீரர்களும் தமது முழுச்சக்தியையும திரட்டி விளையாடினார்கள். ஆனாலும் முதல் பாதி ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் மேலும் கோல்களைப் பெறமுடியவில்லை.

இரு அணிகளும் தமக்கு நல்லமுறையில் கோல் பெறக்கூடிய வாய்ப்புக்களில் கூட எதிரணியினர் பந்தைத் தடுத்து விடுவார்களோ என்ற பதற்றத்தினாலோ என்னவோ பந்தைக் கொண்டு வந்து கோல் கம்பங்களுக்கு வெளிப்புறமாக அடித்து விட்டுச் சென்றார்கள்.

முதல் பாதி ஆட்டம் 1 இற்கு 0 என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பல்வேறு சோதனைகளுக்கு உரிய ஆட்டமாகக் காணப்பட்டது. இரு அணிகளின் ஆதரவாளர்களும் தமது அணிக்கான ஆதரவை மிகவும் அட்டகாசமாக வெளிப்படுத்தினார்கள்.

வீரர்களும் தமது யுத்திகளையும் சக்தியையும் நல்லமுறையில் பயன்படுத்தினார்கள்.

இதேநேரம், கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக வீரர்கள் இருவர் விளையாட்டு விதிமுறைகளுக்கு எதிராக விளையாடியமைக்காக மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் எதுவும் பெறவில்லை. இந்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டமுடிவில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டம் பார்வையாளர்களின் பல்வேறு எதிர்பார்ப்புக்கள், விமர்சனங்களுக்கு மத்தியில் ஆரம்பமானது. இப்போட்டியில் யாழ். லீக்கைச் சேர்ந்த பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் இரு அணிகளின் திறமைகளையும் வெளிப்படுத்திய ஆட்டமாகவே ஆரம்பம் முதல் இறுதிவரை காணப்பட்டது. இரு அணிகளாலும் கோல்கள் பெறுவதற்கான பந்துகள் பல கொண்டுசெல்லப்பட்டபோதிலும் கோல்களைப் பெறமுடியவில்லை.

இந்நிலைமையில், அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கு ஒரு மூலை உதை கிடைத்தது. இடதுபக்க மூலையில் வைத்து தீபன் எதிரணியினரின் கோல்கம்பத்தின் வலதுபக்க கம்பத்தின் முன்னாலும் பந்து விழக்கூடியவாறு உதைத்தார். ஆனால், அந்தப் பந்தை சென்.அன்ரனீஸ் வீரர் பிக்கினஸ் தலையில் முட்டி மோதமுற்பட்டார். அவரது தலையில் பட்ட பந்து கோல் கம்பத்தில்பட்டு மைதானத்தினுள் திரும்பியது.

இதனை அவதானித்த விநாயகர் அணியின் முன்னணி வீரர் துஷ்யந்தன், கோல் கம்பத்திற்கு அருகில் நின்று மிகவும் கவனமாகக் கால்களை நீட்டி உதைத்தார். கோல் எல்லையில் இருந்து சுமார் 5 அடி தூரத்தில் இருந்த பந்து இந்த உதையால் கோல் கம்பத்தினுள் நுழைந்தது. இதன்மூலம் யாரும் எதிர்பாராத வண்ணம் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கு முதலாவது கோல் கிடைக்கப்பெற்றது. கோல் பெற்ற சில நிமிட நேரத்திலேயே முதல் பாதி ஆட்டம் 1 இற்கு 0 என்ற கோல் கணக்குடன் பூர்த்தியாகியது.

இரண்டாவது பாதி ஆட்டம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தினுடையதாக அமைந்து இருந்தது என்றால் அது மிகையாகாது. தொடர்ச்சியாக சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் எதிரணியினரின் கோல் கம்பங்களை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தார்கள்.

இவர்களுக்கு சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழக வீரர்களும் விளையாடினார்கள். எதிரணியினர் கொண்டுவந்து அடித்த பல பந்துகளை கோல்காப்பாளர் பாஸ்கரன் திறமையாகத் தடுத்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் முன்னணி வீரராக விநாயகர் விளையாட்டுக் கழகத்தல் விளையாடிய கொன்சன்ரைன் கிங்ஸ்ரன் பாஸ்கரன் இரண்டாம் பாதி ஆட்டத்தின்போது தனது நிலையை மாற்றி பின்னணி ஆட்டக்காரராக விளையாடினார். அவர் எதிரணியின் கோல்கள் பெறக்கூடிய பல பந்துகளை மிகவும் நுட்பமாகத் தடுத்துப் பெற்று எதிரணியினர் பக்கம் திருப்பி அடித்தார். இதனால் எதிரணியினரின் கோல்கள் பெறும் வாய்ப்புக்களை அவர் பல சந்தர்ப்பங்களில் முறியடித்து பார்வையாளர்கள் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆட்டம் முடிவடையும் இறுதிநேரம் வரை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் கோல்கள் பெறும் முயற்சியில் சளைக்காமலும் விடாமுயற்சி யுடனும் விளையாடிய போதிலும் கோல்களைப் பெற அவர்களால் முடியவில்லை.

ஆட்டமுடிவில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.(ஒ-86)

தென்மராட்சி வலய சதுரங்கம்:

# கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆண்கள் பிரிவில் முதலிடம் பெற்றது

தென்மராட்சி,மார்ச்31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளில் 15வயதுப் பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும் 19வயதுப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் முதலிடங்களைப் பெற்றுள்ளன.

போட்டி முடிவுகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

ஆண்கள் : கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பெண்கள் : கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.

**19வயதுப் பிரிவு**

ஆண்கள் : சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, மீசாலை விக்னேஸ்வரா வித்தி.

பெண்கள் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (3-117)

# கரவெட்டி பிரதேச தடகள போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்31

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் தங்களுடைய தடகள விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. (3-190)

# அந்தோனியார் கல்லூரி ஆண்கள் பிரிவில் முதலிடம்

ஊர்காவற்றுறை,மார்ச்31

தவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலிடம் பெற்றது.

பெண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம் வித்தியாலயம் முதலிடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இவ்விரு அணிகளும் மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றவிருக்கின்றன என அணிகளின் பயிற்றுநர் எம்.மெடோன் தெரிவித்தார். (3-16)




# நியூஸிலாந்தை வீழ்த்தியது ஆஸி. கிரிக்கெட் அணி

ஒக்லாந்து கிரிக்கெட்டில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்கின் அபார ஆட்டத்தால் ஆஸ்திரேலிய அணி நியூஸிலாந்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் ஆஸ்திரேலியா தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நியூஸிலாந்து சென்ற ஆஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி மழையால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முக்கியமாக மூன்றாவது டெஸ்ட் ஒக்லாந்தில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் நியூஸிலாநது 292 ஓட்டங்களும் ஆஸ்திரேலியா 383 ஓடடங்களும் எடுத்தன. மூன்றாம் நாள் முடிவில் நியூஸிலாந்து அணி இரண்டாம் இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 11 ஓட்டங்களை எடுத்திருந்தது.


ஆட்டநாயகன் பொன்டிங்.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. மெக்ராத், வோர்ண் அபாரமாகப் பந்து வீச, நியூஸிலாந்து இரண்டாம் இன்னிங்ஸில் 254 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆஸ்லே 69, வின்சென்ட் 40, வெட்டோரி 65 ஓட்டங்கள் எடுத்தனர். ஆஸ்திரேலிய தரப்பில் வோர்ன், மக்ராத் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு மழை அச்சுறுத்தலாக இருந்தது. இதையடுத்து நான்காம் நாளில் ஆட்டத்தை முடிக்கும் நோக்குடன் விளையாடினார் பொண்டிங். இவர் 11 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 84 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்து வெற்றியை உறுதிசெய்தார். லாங்கர் 59 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் ஆஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக பொண்டிங், தொடர்நாயகனாக கில்கிறிஸ்ட் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் வைஸ்மேன் விக்கெட்டை வீழ்த்தியபோது, டெஸ்ட் அரங்கில் தனது 499 ஆவது விக்கெட்டைப் பெற்றார். ஆஸ்திரேலியாவின் மக்ராத், இவர் தற்போது வோர்ன் (583), முரளிதரன் (532), கொட்னி வோல்ஸ் (519) ஆகியோருக்குப் பிறகு நான்காவது இடத்தில் உள்ளார்.

500 விக்கெட் என்ற மைக்கல்லை எட்டத் தவறியமை குறித்து மெக்ராத் கூறுகையில், "எதிர்வரும் ஜூலையில் லோர்ட்ஸ் அரங்கில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் நடக்கிறது. இப்போட்டியில் 500 விக்கெட்டை எட்டுவேன். அதுவரை காத்திருப்பதில் தவறில்லை" என்றார்.

# திறமை குறித்த விமர்சனம் சௌரவ் கங்குலி விளக்கம்




"இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக நீண்டகாலம் பொறுப்பு வகிக்கிறேன். எனது திறமையை யாரிடமும் நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை" என்கிறார் சௌரவ் கங்குலி.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் செயற்பாடுகள் படுமோசம். மூன்று போட்டிகளும் சேர்த்து அவர் மொத்தம் எடுத்தது 48 ஓட்டங்கள் (சராசரி - 9.6). குறிப்பாக பெங்களூர் டெஸ்ட் போட்டியில் அவரது பொறுப்பற்ற துடுப்பாட்டம் தோல்விக்கு வழிவகுத்துவிட்டது. அணித் தலைவர் பொறுப்பில் இருந்து அவரை உடனடியாக நீக்க வேண்டும் என்ற குரல்கள் பல திசைகளில் இருந்தும் கிளம்புகின்றன.

இதுபற்றிக் கேட்டபோது பதிலளித்த கங்குலி "நான் அணித் தலைவரா இல்லையா என்பது முக்கியமில்லை. ஒரு வீரராக நிறைய ஓட்டங்கள் குவிக்கவேண்டும். அது முக்கியம் என்பதை நன்கு உணர்ந்திருக்கிறேன். ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இருந்தே முழுத் திறமையும் காட்டி ஓட்டங்களைக் குவிப்பேன். இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக நீண்டகாலம் பணி புரிந்திருக்கிறேன். எனது திறமையை யாரிடமும் நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை. அணித் தலைவர் பொறுப்பில் நான் நீடிப்பதா? இல்லையா? என்பதை தேர்வுக் குழுவினர்தான் முடிவு செய்யவேண்டும்" என்றும் தெரிவித்தார்.

# நடுங்கும் மேனி நடுங்காத கொள்கை...



**தமிழினத் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் 107ஆவது பிறந்தநாள் நினைவு தினம் இன்றாகும்.**

ஊதிவிட்டால் விழத்தக்க குச்சிவடிவம் தாங்கி நம்மிடையே காட்சியளித்தவர் தந்தை செல்வா. ஆனால், அவரிடம் தளராத கொள்கையிருந்ததினால் இந்நாட்டை ஆண்ட அரசுகள் அவரைக் கண்டு நடுங்கின. இந்திய விடுதலை வரலாற்றிலும் பாகிஸ்தான் விடுதலை வரலாற்றிலும் இரு பெரும் தலைவர்கள் இத்தகைய வடிவம் கொண்டே விளங்கினர். ஒருவர் அண்ணல் காந்தி. மற்றையவர் முகமதலி ஜின்னா. முன்னையவர் பிரித்தானியப் பேரரசை ஆட்டம் காணச்செய்தவர். பின்னையவர் இந்திய அரசியலை ஆட்டிப்படைத்தவர். ஒரு நாட்டினைத் தலைமை தாங்குவதற்கு உடல் உறுதியைவிட, உள்ள உறுதியே முதன்மை வாய்ந்தது என்பதை இத்தலைவர்கள் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய தலையாய பண்புகள் உள்ளத் தூய்மையும், சிந்தனைத் தெளிவும், செயலில் துணிவும் என்பதை மறக்காது இருத்தல் நலம். நெருக்கடிக்கு ஈடுகொடுக்கின்ற தலைவனிடம் (a leader in crisis) இப்பண்புகள் குடிகொண்டிருந்தால்தான் அவனால் வெற்றி பெறமுடியும். இவை அனைத்திற்கும் மேலாக 'எமைந்துவாயென எதிரிகள் கோடி இட்ட இழைத்தாலும் தொடேன்' என்ற விலை போக மறுக்கின்ற உறுதிப்பாடும் ஒரு தலைவனிடம் நிலை பெற்றிருக்கவேண்டும். எம் தந்தை வேலுப்பிள்ளை செல்வநாயகத்திடம் இப்பண்பு நிறைந்திருந்தது. இன்று தம்பி வேலுப்பிள்ளை பிரபாகரனிடமும் இதே பண்பு தலை தூக்கியுள்ளதால் எம்மை வழிநடத்தும் தளபதியாக தலைவனாக மலர்ந்துள்ளார்.

பல பேசக் காமுறாது சில சொற்களையே அளந்து பேசியவர் தந்தை செல்வா. சொற்கள் மீது காதல் கொண்டு என் வாழ்க்கையை இழக்க யான் ஆயத்தமில்லை (For the love of words I am not prepared to lose the case) என்பது அடிக்கடி அவர் வாயில் இருந்து வரும் சொற்கள். மேற்கூறிய சொற்களோடு வாயில் புன்னகை பூத்த நிலையில் அவர் கூறும் மற்றைய சொற்றொடர் 'Winning a case is lasy but winning a cause is difficult' (வழக்கில் வெற்றி பெறுவது எளிது, ஆனால், கொள்கையில் வெற்றி பெறுவது கடினம்) என்பதே ஆகும். வேறு சொற்களில் விளம்பின், தந்தை செல்வா பேசியது மிகக் குறைவு. எழுதியது அதைவிடக் குறைவு. ஆனால், எம் நிலை பற்றி ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றினார். ஆகவேதான், அவர் வாயில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லையும் தமிழ் மக்கள் உன்னிப்பாகக் கவனித்தனர். 'உள்ளத்தில் ஒளி உண்டாயின், வாக்கினில் ஒளி பிறக்கும்' என்ற பாரதியின் கூற்று தந்தையின் சொற்களைப் பொறுத்தவரை முற்றிலும் பொருத்தமுடையதே.

### மாற்றாரிடம் மயங்காத மனப்பான்மை

தந்தையைப் பொறுத்தவரை மாறுபடும் கருத்துக்களைப் பொறுமையோடு செவிமடுப்பார். ஆனால், தான் ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் எடுத்த முடிவுகளை விட்டுக்கொடுத்ததில்லை. மாற்றாரின் புன்முறுவலோ மயக்கும் மொழிகளோ தந்தையை என்றும் மயக்கியதில்லை. மாறாகத் தானும் புன்முறுவல் பூத்துத் தன் கருமத்தில் கண்ணாயிருந்தார். எதிர்தது அழிக்கமுடியாத தலைவர்களை அணைத்து புகழ்மாலை சூட்டி, பட்டம், பதவி வழங்கி அழிப்பது அரசியலில் எதிரிகள் கையாளும் ஒரு சூழ்ச்சி. அரசியலில் நிறைய அனுபவம் பெற்ற தந்தை அவர்கள் இத்தகைய நிலையற்ற மாயைகளில் மயங்கமறுத்தார்.

### சட்டத்துறையில் தலையாய நிலை

சட்டத்துறையில் அவர் மிக உன்னத நிலையில் இருந்தபோதும், அரசியல் வழக்குரைஞராக விளங்கியபோதும் நான் என்ற அகந்தை - நான் என்ற செருக்கு அவரை ஆட்சி கொணடதில்லை. காட்சிக்கு எளியவராய், கடுஞ்சொல் அற்றவராய் வன்சொற்கள் மொழியப் பட்டபோதும் தமக்கேயுரிய புன்முறுவல் பூத்துத் தன்னடக்கத்தின் திருவுருவமாக விளங்கியவர் எம் தந்தை அவர்கள்.

### நம்பிக்கைத் துரோகம் கண்டு கோபித்தவர்

தந்தையை எவரும் எளிதில் கோபத்திற்கு ஆளாக்கமுடியாது. ஆனால், அவரின் கோபத்தைத் தூண்டக் கூடிய செயல் ஒன்று இருந்ததென்றால், அது நம்பிக்கைத் துரோகச் செயல் ஒன்றுதான். குறிப்பாக, தமிழ்மக்கள் நம்பிக்கைவைத்து அனுப்பிய தலைவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்தால், அவர் பல்லை நெருடிக் கோபித்த காட்சிகள் இன்றும் எமக்கு நினைவிற்கு வருகின்றன.

தந்தை செல்வா தனி மனிதரை எல்லை மீறிப் புகழ்வதையோ, தனி மனிதர் வழிபாட்டையோ விரும்பியதில்லை. மாறாக, வெறுத்தார் என்றே கூறமுடியும். தலைவர்கள் தடம் புரண்டாலும் கொள்கைகள் நிலைத்து வாழவேண்டும் என்பது அவரின் நிலையான கோட்பாடு. ஆகவேதான், இன்று தோன்றி, நாளை மறையக்கூடிய தலைவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்துத் தத்துவத்தை வழிபடுங்கள் என்று அடிக்கடி வலியுறுத்துவதும் உண்டு. "நானோ கிழவன், நான் சாகக்கூடும். ஆகவே, என்னைக் கும்பிடாதீர்கள், என் கொளகையைக் கும்பிடுங்கள்" என்று மீளமீள வற்புறுத்தியுள்ளார்.

**மா.க.ஈழவேந்தன்**

தந்தை செல்வாவோடு அடிக்கடி காரில் பயணம் செய்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுண்டு. குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தின் குக்கிராமங்கள் எல்லாம் நாம் சென்று பார்வையிட்ட போதெல்லாம் "மூன்று போக விளைச்சலுள்ள இந்தப் பூமியையா நாம் இழப்பது" என்று உணர்ச்சி வயப்பட்டு கண்கள் கலங்கிய நிலையில் அவர் கூறிய கூற்றுக்களை இன்று எண்ணுகின்ற போதுகூட எம்மையறியாமலே எம் கண்களில் நீர் பெருகுகிறது. தந்தை செல்வா வழியில் நிலப்பாதுகாப்பு பற்றிச் சிந்தித்த வன்னியசிங்கம், டாகடர் நாகநாதன், சிந்தனைச்சிற்பி கதிரவேற்பிள்ளை அவர்களையும் நாம் மறப்பதற்கில்லை.

### போர்க்கோல உணர்வைப் போற்றியவர் தந்தை

"தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்தில் இரத்தம் சிந்தியும், சிறையேற்றும், பொருள் நட்டமடைந்தும், உயிர் துறந்தும், அல்லல் உற்றுள்ளோம். இருந்தும் எமக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால், வெற்றி கிடைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றுதான் நான்கூற விரும்புகின்றேன். கடந்த காலங்களில் பல் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தமிழ் இனத்திற்கே என்பது சந்தேகமறத் தெளிவாகிவிட்டது. இருந்தாலும் பூரண வெற்றி கிடைக்கும் வரை போர்க்கோலமிருந்தேயாக வேண்டும். தோல்வி மனப்பான்மை அறவே கூடாது என்று மொழிந்தவர் தந்தை செல்வா.

### தமிழீழம் பேரம் பேசும் கோரிக்கையல்ல

"நாம் விடுக்கும் தனிநாட்டுக்கோரிக்கை மாற்ற முடியாத முடிவாகும். இது வெறும் பேரம் பேசுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையல்ல (Our demand for a separate spate is an invariable decision. It is not just made for bargaining purposes). தனி நாட்டுக் கோரிக்கையென்பது புதியதுமல்ல எம்மிடம் இருந்ததை - இழந்ததை மீண்டும் நிலைநாட்டுகின்றோம்" என்று தனது கொள்கையைத் தெட்டத் தெளிவாகக் கூறியவர் நம் செல்வா அவர்கள்.

எம்மைப்போல் தந்தை செல்வாவுடன் மிக நெருங்கிப் பழகியவர் சுதந்திரன் ஆசிரியர் திரு.கோவை மகேசன் அவர்கள். பின்பு அவர் புலிகளின் வீரவேங்கை இதழின் ஆசிரியராகவும் விளங்கியவர். எனவே, தந்தை செல்வா பற்றியும் தம்பி பிரபா பற்றியும் இணைத்துக் கூறும் கருத்துக்கள் எம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை.

*"இணைப்பாட்சி இனியில்லை, எம் முன்னோர் கண்ட ஈழத்திரு நாட்டை மீட்ப தொன்றே தமிழினம் தப்பிக்க ஒரே வாய்ப்பென்று தரணியெல்லாம் அறிந்திட நீ முழங்கி நின்றாய்*
*தமிழர்க்கு நீ தந்தை இறுதி ஆணை தமிழா நீ போராடு ஈழம் காண!"*

சோதனைகள் வேதனைகள் சூழ்ந்திட்டாலும் சோராதே தமிழா நீ புலியாய் மாறு என்று எம் தந்தை செல்வா புகழ்பாடும் கோவை மகேசன் அவர்கள் -

நீங்கள் மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் ஓயவில்லை தமிழர் படை. ஒவ்வோர் நாளும் வளர்கின்றது புலிகள் படை. சிங்களத்துப் பகைவர் படை சாய்கிறது. உந்தன் பேரன் பிரபாவின் தலைமையில் மலரும் ஈழம் என்று உறுதியோடு தமிழகம் மலரும் என்று அவரும் முழங்கிச் சென்றுள்ளார். இன்று எம்மிடையே தந்தை செல்வாவும் இல்லை. எம் கோவை மகேசனும் இல்லை. ஆனால், அவர்கள் கண்ட கனவு நனவாகும் முறையில் பிரபாத்தம்பி ஆளுகின்ற நாளுமுண்டு. இரண்டோராண்டில் அந்த வெற்றித் திருநாளை எதிர்பார்த்து ஏற்ற பணியாற்றுவோமாக!

தந்தை செல்வா அறவழியில் ஈழம் காண முனைந்தவர். அவர் பேரன் பிரபாகரன் காலத்தில் மாறுதலுக்கு ஏற்ப மறவழியில் ஈழம் காண வெற்றிப்பாதையில் வந்துகொண்டிருக்கின்றார். வேலுப்பிள்ளை செல்வநாயகம் தொடக்கி வைத்த பணியை வேலுப்பிள்ளை பிரபாகரன் இனிது முடித்து வைப்பது உறுதி. ஈழத்தின் தோற்றம் காலத்தின் கட்டாயம். வரலாற்றின் தீர்ப்பும் அதுவாகவே அமையும். ✳

---

**இலங்கை மின்சார சபை சர்ச்சை**

## எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டோரின் பெயர் விவரங்களைத் திரட்டுகின்றது அரசு!

கொழும்பு,மார்ச்31

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசின் திட்டத்தை ஆட்சேபித்து வேலை நிறுத்தங்களையும் சுகவீன லீவுப் போராட்டங்களையும் நடத்தியவர்கள் யார் என்ற பெயர் விவரங்களைத் திரட்டுமாறு அரச உயர்மட்டத்திலிருந்து மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சுக்கு அழுத்தமொன்று வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனையடுத்து இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன எனக்கூறி, புதிய சர்ச்சையொன்றை உருவாக்கி, மீண்டுமொரு தொழிற்சங்க நடவடிக்கையை நோக்கிச் செல்லக்கூடுமென்று கருதப்படுகிறது.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் கலந்துகொண்டவர்களின் விவரங்கள் திரட்டப்படுவதை அறிந்த மின்சார சபைத் தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் பலர் இலங்கை மின்சாரசபைத் தலைவர் ஆனந்த குணசேகரவின் அலுவலகத்திற்குச் சென்று இதுகுறித்து விவரம் கேட்டனர் என்றும் -

அப்போது அங்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்றும் -

இதையடுத்து பெயர் விவரங்களைத் திரட்டும் இந்த நடவடிக்கையை வாபஸ் பெறுவார் என மின்சார சபைத் தலைவர் உறுதியளித்தார் என்றும் -

மேற்படி தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்காலத்தில் இந்த நடவடிக்கை மூலம் தமது தொழில் வாய்ப்பு பாதிக்கப்படுவதுடன், உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சாத்தியமும் உள்ளதால் இந்தச் செயற்பாட்டை உடனடியாகக் கைவிட வேண்டுமென்றும் இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இதேவேளை, கடந்த திங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்களின் பெயர் விவரங்கள் அனைத்தையும் மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சின் முக்கியஸ்தர்கள் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.(க-3)

## வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது

வலி.வடக்கு,மார்ச்31

இரு பெண்க்ளுக்கு இடையே கிணற்றடியில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கடைசியில் வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

சுன்னாகம் கல்லாக்கட்டுவன் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இரு பெண்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்ச் சண்டையைத் தொடர்ந்து இரு பெண்களினதும் ஆண் சகோதரர்கள் மோதிக்கொண்டனர்.

இதில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானார். வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பெண்களில் ஒருவர் கொட்டன் அடிக்கு உள்ளானார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவரான ஆண், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இச்சண்டை சம்பந்தமாக அரசியல்துறையில் முறையிடப்பட்டுள்ளது. பொலீஸாரும் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ஒ-86)

## தென்னையிலிருந்து வீழ்ந்தவர் காயம்!

தென்மராட்சி,மார்ச்31

தேங்காய் பறிக்க மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பகல் 11மணியளவில் கொடிகாமம் மாதா கோயிலடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலன் சந்திரன் (வயது 40) என்பவரே இதில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டவராவார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு தொற்றுநீக்கி இயந்திரம்


யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ். போதனா வைத்தியசாலை கிருமித் தொற்று அகற்றும் பிரிவுக்குப் புதிய கிருமித் தொற்று நீக்கி இயந்திரம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இந்த இயந்திரம் கொழும்பு சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலைக்கு லொறி மூலம் எடுத்துவரப்பட்ட இந்த இயந்திரத்தை வெகு விரைவில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-15)

## சாயி சிந்தனை

### காண்பதெல்லாம் கடவுள் வடிவம்



**எத்தனையோ பேர் கடவுளைக் காண வேண்டுமென்று அலைகின்றனர். இது என்ன பைத்தியக்காரத்தனமான கோரிக்கை. அவர்கள் பார்க்கும் எல்லாவற்றிலும் கடவுள் இருப்பதை அவர்கள் உணரவில்லை. அனைவரும் இறைவனின் வடிவங்களே. பிறகு எப்படி இறைவனைக் காண வேண்டும் என்று விரும்புகிறாய்? வேதங்களும் இதையேதான் சொல்கின்றன. "காண்பதெல்லாம் கடவுள் வடிவம் என்று இருக்கையில் கடவுளைத் தேடி அலைவதென்ன மூடனே" என்று உரைக்கின்றன. அனைத்தும் தெய்வ சொருபமாக இருப்பதால் "அஹம் ப்ரம்மாஸ்மி" என்ற தத்துவத்தை உணர முயற்சிக்க வேண்டும். ஆனால், "அஹம் ப்ரம்பாஸ்மி" என்பதுடன் முடிவதில்லை.**

**மற்றொன்று உண்டு. பகவத் கீதையில், "மமாத்மா சர்வபூத அந்தராத்மத" என்று கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய ஆத்மாவே எல்லாப் பூதங்களிலும் நிறைந்திருக்கிறது. ஆகவே, அனைவரிடமும் நிறைந்திருப்பது பகவானது ஆத்மாவே எனப் புரிகிறது. ஆத்மா ஒன்றுதான் இரண்டல்ல. ஆகவே, எல்லோரிடமும் நிறைந்திருக்கும் ஆத்மா தெய்வ தத்துவம் என உணர்ந்துகொள். அப்பொழுதுதான் மானவத்வம் பூரணத்துவம் அடையும்.** *(நன்றி: தெய்வீகம் மலரும் பொழுது).*

## முல்லை. மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில்
# பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு பொருண்மிய நிறுவனம் நடவடிக்கை

பரந்தன்,மார்ச்31

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில், கால்நடை வளர்ப்போரின் நன்மைகருதி பால் கொள்வனவு நடவடிக்கையில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம், மாங்குளம், ஸ்கந்தபுரம், உருத்திரபுரம், கிளிநொச்சி, தர்மபுரம் ஆகிய இடங்களில் பால் கொள்வனவை பொருண்மிய நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது. இதற்கென நிறுவப்பட்டுள்ள பால் கொள்வனவு நிலையங்களில் ஒரு லீற்றர் பசும்பால் 12 ரூபாவாகவும் ஒரு லீற்றர் எருமைப்பால் 14 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இது தொடர்பாகத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் செந்தில் கருத்துத் தெரிவித்தபோது-

கால்நடை வளர்ப்போர் தாம் எடுக்கும் பாலை மேற்படி நிலையங்கள் ஊடக விற்பனை செய்து பயனைப் பெறமுடியும்.

அதிகமான பால் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு எம்மால் கொள்வனவு செய்யப்படுமானால், பால்மா தயாரிப்பையும் நாம் மேற்கொள்ளமுடியும் - என்றார். (ஒ-352-202)

## உதவிப்பணம் பெறுவதில் முதியோர் சிரமம்

வெள்ளாங்குளம்,மார்ச்31

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வயோதிபர்களுக்குக் கடந்த 3மாதங்களுக்கான மாதாந்த உதவித்தொகை வழங்கப்படவில்லை.

இந்த உதவித் தொகையைப் பெறுவதற்காக வயோதிபர்கள் தினமும் தபால் அலுவலகங்களுக்கும், கிராம சேவகர் அலுவலகத்திற்கும் அலைந்தவண்ணம் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ஒ-415-202)

## அரசின் நிதி போதாமையால் தென்னை மீள் நடுகை தாமதம்

பரந்தன்,மார்ச்31

அரசு நிதி போதுமானதாக இல்லாததால் அழிந்த தென்னை வளத்தை மீளக் கட்டியெழுப்பும் பணி தாமதமாகிறது.

கடந்த கால போர் நடவடிக்கைகளால் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட தென்னை மரங்கள் அழிந்தன. அவற்றை மீள் நடுகை செய்து தென்னை வளத்தை பேணும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நிலவும் சமாதான காலத்தில் மீள் நடுகைத் திட்டத்தில் 65 ஆயிரம் தேங்காய் நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும் மீள் நடுகைத் திட்டம் மந்த கதியிலேயே நடைபெற்று வருவதால் மீளவும் பழைய வள நிலைக்குத் திரும்புவது தாமதமாகவே நடைபெறுகின்றது.

இது தொடர்பாகத் தென்னை அபிவிருத்தி அலுவலரைக் கேட்டபோது:-

மீள் உற்பத்திக்கு வேண்டிய அரச நிதி போதுமானதாக எமக்குக் கிடைக்கவில்லை. இதனால்தான் தென்னை உற்பத்தி தாமதமடைகின்றது - என்றார்.

இச் சமாதான காலத்தில் அரச நிதியுதவியைப் பெற்றுத் தென்னைப் பயிர் செய்கையை அபிவிருத்திசெய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயனாளிகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

(ஒ-352-202)

## புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

புதுக்குடியிருப்பு,மார்ச்31

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

இன்று காலை 9 மணிமுதல் 10 மணிவரை வேணாவில் முன்பள்ளியிலும் 10 மணிமுதல் 11 மணிவரை முதலாம் வட்டாரம் அன்பு முன்பள்ளியிலும் நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரை கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை கோம்பாவில் கிராம சேவகர் அலுவலகத்திலும் தடுப்பூசி போடப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 11மணிவரை விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் ஒருமணிவரை ஒட்டுசுட்டான் மருந்தகத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை மூங்கிலாறு ஆரம்பசுகாதார நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

(ஒ-353-202)

## முல்லை. மாவட்டத் தமிழ்ச் சங்கம் வற்றாப்பளையில் அங்குரார்ப்பணம்

புதுக்குடியிருப்பு,மார்ச்31

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்ச்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதற்கான விழா வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயக் கலைக் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகனகரத்தினம், கல்வியியலாளர்கள், தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் சங்கத்தின் நோக்கம், குறிக்கோள் என்பனவும், சங்கத்திற்கான யாப்பும் வரையறை செய்யப்பட்டன. சங்க நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.


அதன்படி தலைவராக க.சரவணபவனும் உப தலைவராக மு.குகதாசனும் செயலாளராக க.ஜெயவீரசிங்கமும், உப செயலாளராக இ.செல்வநாயகமும் பொருளாளராக சி. சுப்பிரமணியேஸ்வரனும் பத்திராதிபர்களாக சி.குணலட்சுமி, ந.இராசலட்சுமி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன், நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.


இந்த விழாவைத் தொடர்ந்து நிர்வாகக் குழுவினர் சங்கம் செயற்படுத்தவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றினர்.

பொதுக் கலைத் தேர்வுக்கான வகுப்புகளை புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் உடன் ஆரம்பித்தல், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றோரைக் கௌரவித்தல், ஆண்டுதோறும் மரபு ரீதியான கலை வடிவங்களை வெளிக்கொணரல், பிரதேச ரீதியாக விழா எடுத்தல், பாரம்பரியக் கலை வடிவங்களைப் பாதுகாக்கும் முகமாகச் சுவடிகள், கலைப் பொக்கிஷங்கள் என்பவற்றைப் பாதுகாத்தல் என்பன உட்படச் சில தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

(ஒ202-353)





பரந்தன் அரச விதைப் பண்ணைக்கான கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. விதைப்பண்ணைக் கட்டடத்தை முதற் படத்திலும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் புதிய கட்டடத்தை நாடா வெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## ஒட்டுசுட்டானில் கணனிப் பயிற்சி

ஒட்டுசுட்டான்,மார்ச்31

பொருண்மிய மதியுரையக நிறுவனத்தால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கணனிப் பயிற்சிநெறியின் 2ஆம் கட்ட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஒ-341-202)

## பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

பூநகரி,மார்ச்31

கிளிநொச்சி, பூநகரி மகா வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பொன்.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் தி. கணபதிப்பிள்ளை சிறப்புரையாற்றுவார். (403-202)

## ஏ- 9 வீதியை அகலப்படுத்தும் பணி துரித கதியில் இடம்பெறுகின்றது

பரந்தன்,மார்ச்31

கிளிநொச்சி நகரில் ஏ-9 சாலையை அகலப்படுத்தும் வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

தமிழீழக் காவல்துறையின் அனுசரணையுடன் கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் மேற்படி வேலைகள் இடம்பெறுகின்றன.

ஏ-9 சாலையின் நடுப்பகுதியிலிருந்து இரு மருங்கிலும் 66 அடிகள் அகலமாக்கப்படுகிறது. ஏ-9 சாலையின் 155 ஆம் கட்டைப் பகுதியிலிருந்து கரடிப்போக்குச் சந்தி வரை தற்பொழுது வீதியை அகலமாக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வீதி அகலமாக்கும் பணிக்கு கடை உரிமையாளர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதாகவும் வீதியின் இருமருங்கிலும் குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள கட்டடப்பகுதிகள் அகற்றப்படுவதாகவும் பிரதேசசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீதி அகலமாக்கும் பணிமுடிவடைந்த பின் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட முடியுமெனவும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-352-202)

## வீதி ஒழுங்கை அனைவரும் பின்பற்றினால் விபத்துக்களை முற்றாகத் தடுக்கலாம்
### காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு அறிவுறுத்து

அனைவரும் வீதி ஒழுங்குகளைத் தவறாது பின்பற்றினால் விபத்துக்களைத் தடுக்கலாம்.

- இவ்வாறு தமிழீழக் காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பகுதியில் நடைபெறுகின்ற விபத்துக்களைப் பார்க்கும்போது விபத்துகளில் சம்பந்தப்படும் நபர்களில் யாரோ ஒருவர் வீதியின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது வீதியைப் பாவித்துள்ளார் என அறியமுடிகின்றது. வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகள், வாகனச் சாரதிகள் ஆகியோர் வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாது நடப்பதால் விபத்துகள் ஏற்படுகின்றன.

பாதசாரிகள் வலது பக்கமாக நடக்க வேண்டும் என்பது விதி. எமது பகுதிகளில் பாதசாரிகளுக்கான நடைபாதை இல்லை. வீதியின் ஓரமாகவே பாதசாரிகள் நடக்கின்றனர். வீதியின் அகலம் குறைவாக இருக்கும்போது வீதி விதிமுறைகளையும் கடைப்பிடிக்காது நடந்தால் விபத்துகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு அதிகம். இதைப் பாதசாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சைக்கிளில் செல்வோர் சமாந்தரமாகப் பயணிப்பதாலும் விபத்துகள் ஏற்படுகின்றன.

சாரதிகள் குறிப்பாக மோட்டார் சைக்கிள் மற்றும் வான் சாரதிகள் எம்மால் வரையறுக்கப்பட்ட வேகக் கணிப்பை விடக் கூடுதலான வேகத்தில் சென்று விபத்துகளை ஏற்படுத்துகின்றனர். ஆகவே, வீதிகளில் உள்ள வேகக் கணிப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

ஒரு சாரதி வீதியின் விதிமுறைகள் தெரிந்தவராகவும் வீதியைப் பற்றித் தெரிந்தவராகவும் இருப்பது அவசியம். ஆகவே, வீதியின் விதிமுறைகளை வீதியைப் பாவிக்கும் சகலரும் கடைப்பிடித்து நடந்தால் விபத்துகள் நடைபெறாது தவிர்க்கலாம் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் உள்ளது.

(ஒ)

## நூல் வெளியீடு

கிளிநொச்சி,மார்ச்31

தமிழவளின் 'எல்லை காக்கும் இல்லங்கள்' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புநிகழ்வாக ஆசிரியை திருமதி சூரியயாழினியின் நெறியாள்கையில் உருவான வவுனியா நிர்த்திக நிகேதரக் கலைஞர்களின் நடனம் இடம்பெறவுள்ளது.

(ஒ-203)

# யாழ்நகர் மைய றோட்டறக்ட் கழகம்

CELEBRATE ROTARY 100 Years

## பாடசாலை இன்ரறக்ட் மாவட்ட றோட்டறக்ட் கழகங்களுக்கிடையிலான வருடாந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பாடசாலை இன்ரறக்ட் மற்றும் றோட்டறக்ட் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுதிகதி: 10.04.2005**

- ☆ பாடசாலை இன்ரறக்ட் கழகம் தமது விண்ணப்பத்தைப் பாடசாலை அதிபர் / கழகப் பொறுப்பாசிரியர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
- ☆ தவணை மீள ஆரம்பிக்கும் போதே போட்டிகள் நடத்தப்படும்.
- ☆ இந்தப் பத்திரிகை விளம்பரமே பொதுவானது
- ☆ பங்குபற்றல் விண்ணப்பம் வந்துசேர வேண்டிய முகவரி:

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்,
C/O க.கபிலன்
பேரம்பலம் வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி.

-திட்ட இயக்குநர்.
யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம். (சி-41877)(42-38-15-14)


# ஆளணி உதவியாளராக நியமனம்

தென்மராட்சி பிரதேச செயலக ஆளணி உதவியாளராக அ.கார்த்திகேசு பொறுப்பேற்றுள்ளார். யாழ்மாவட்ட உதவித் தேர்தல்ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றிய இவர், தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

பிரதேச செயலகத்தில் ஆளணி உதவியாளராகக் கடமையாற்றிய க.பாலசுப்பிரமணியம் பதவி உயர்வு பெற்று சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சென்றதையடுத்து இப்பதவிக்குச் அ.கார்த்திகேசு நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (3-117)

# சங்கிலி அறுத்தவர் விளக்க மறியலில்

தென்மராட்சி,மார்ச்30

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அறுத்தவரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து அங்கு கடமையிலிருந்த பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

சாவச்சேரி பொலீஸார் இந்த நபரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இநத நபரை ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வருமான மேற்பார்வையாளர்களுக்கு வவுனியாவில் பயிற்சிப்பட்டறை

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை விரைவில் நடத்தப்படவுள்ளது.

உள்ளூர் ஆளுகை நிறுவகமும் அகில இலங்கை உள்ளூராட்சி தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து வவுனியாவில் இப் பயிற்சிப் பட்டறையினை நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களுக்கு கட்டம் கட்டமாகப் பயிற்சி நடத்தப்படவுள்ளதாகத் தொழிற்சங்க சம்மேளன வடக்கு - கிழக்கு இணைப்பாளர் செ.சந்திரகுமார் தெரிவித்தார். (3-117)


# 10 ஆவது ஆண்டு நினைவு தினம்



பிறப்பு 15 - 11 - 1927

இறப்பு 23 - 03 - 1995

## அமரர் கதிர்காமு சின்னத்துரை

(முன்னாள் பாதுகாவலர், கீரிமலை தீர்த்தக்கேணி)

திதி:ஷஷ்டி

இன்று உங்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிரய் கிழக்கு,
உரும்பிராய். (43659) (39-38-14-15)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# நாவற்குழி விபத்தில் இருவர் காயம்

நாவற்குழி பிரதான வீதிப் பகுதியில் இடம்பெற்ற டொல்பின் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த மகாலிங்கம் ஆனந்தராஜா (வயது-27), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கே.நடராஜா (வயது-43) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (3-12-15)


# திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்


போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான கட்டணத்தில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 077-308693,
0777-246117,
(26-18-32) 077-6018467. (43613)

தொடர்பு: [illegible],
22,சோமசுந்தரம் பாலர் பாடசாலை.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02.06.1961

மறைவு: 23.03.1999

## அமரர் இரத்தினம் புனிதராசா [செல்வராசா]

(சன்றைஸ் ரேடர்ஸ், சாவகச்சேரி)

திதி :- சஷ்டி (31. 03. 2005)

ஆண்டுகள் ஆறும் சென்றதுவே
உங்கள் திருமுகம் மறைந்து ?
தினம்... தினம் தவிக்கின்றோம்.
உங்கள் நிழல் இழந்து !
மாறாத நின் வதனமதை
நினைத்து நினைத்து உருகுகின்றோம் !
நின் பாச அன்பு பிறக்கும் வதனத்தை
நாம் எங்கே இனிக்காண்போம்?

மீசாலை கிழக்கு,
மீசாலை.

அன்பு மனைவி, மக்கள், தாய், தந்தை,சகோதரர்கள், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(43612) (56-11-14)


# மீசாலையில் வாள்வெட்டு; இருவருக்குப் படுகாயம்

மீசாலை, புத்தூர்ச் சந்திப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வரணி, குடமியனைச் சேர்ந்த ஆறுமுகம் சிவகரன் (வயது-22), தாவளை இயற்றாலையைச் சேர்ந்த கந்தசாமி சிறிகாந்தன் (வயது 26) ஆகிய இளைஞர்களே படுகாயமடைந்தவர்களாவர். நீண்ட காலமாக உள்ள பகை காரணமாகவே இந்த வாள்வெட்டுச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (3-12-15)


# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் **திரு.இ.சந்திரகுமார்** ஜே/107 அவர்களின் அன்புத் தந்தை

## வேலுப்பிள்ளை இராமலிங்கம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகவும் துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலரும் அலுவலர்களும்
நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர். (சி.41888) (39-38-14-15)



# உடன் தேவை

மோட்டோரோலா மேசைத் தொலைபேசி உடன் தேவை.

தொடர்பு: T.P.:060 2212668
0773222680



# பசுமாடுகள் மற்றும் மாட்டு எரு விற்பனை

எமது சங்கத்தில் இரண்டு பசு மாடுகளும் (இல.01, இல.02) மாட்டு எருவும் விற்பனை செய்யப்படவுள்ளன. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலையை 09.04.2005 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பசு மாடுகள் மற்றும் மாட்டு எரு என்பனவற்றை அலுவலக நேரத்தில் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். கூடிய விலைதாரருக்கே விற்பனை செய்யப்படும்.-

**பொதுமுகாமையாளர்**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
கலாசாலை வீதி.
திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்.

(சி.41890)(42-38-14-15)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





யாழ்.நகர் ஜெயக்குமாரன் (நாதன்), பண்ணாகம் அன்பரசி (துங்கம்) தம்பதியினரின் செல்வப் புதல்வன் **செல்வன் அனுஷ்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (31.03.2005) வியாழக்கிழமை லண்டன் மாநகரிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் அனுஷ் அவர்களை அம்மா, அப்பா, பண்ணாகம் அம்மம்மா, லண்டன் அப்பம்மா, ஆசையம்மா, ஆசையப்பா, சாரங்கன் அண்ணா, அமெரிக்கா பெரியம்மா, பெரியப்பா, சௌமியா அக்கா, அண்ணாமார் நவீன், நர்த்தன், துரைமாமா, சுவிஸ் சின்னமாமா, பெரியமாமா, மாமி, ராகவி மச்சாள், லண்டன் சுரேஸ் சித்தப்பா, சித்தி, ஹரிஸ் தம்பி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், ஜெயக்குமாரி மாமி, மாமா, மச்சான்மார், கொழும்பு மலர் மாமி, மாமாகுடும்பம், யாழ். பஞ்சலிங்கமாமா,பத்மா அத்தை, மச்சான்,மச்சாள்,இந்தியா கிருஷ்ணா அங்கிள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பார்புகழும் வீரனாய் விசவத்தனை முருகன் கருணை, வடக்கம்பரை முத்துமாரி அம்மன் திருவருள், நெல்லியான் காளித்தாயின் பேரருளுடனும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ மனமார வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
திருமதி ஆ.நடராசா
(அம்மம்மா)
பண்ணாகம், சுழிபுரம்.
(43548)(50-16-18)



# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 12 - 10 - 1935

ஆண்டவன் அடியில் 01 - 04 - 1994

## அமரர் மு.இராசரத்தினம்

(முன்னாள் செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி)

திதி: 31.03.2005

பதினோராண்டு சென்றதையா
அறியாத எம் துயர்?
இன்று அரும்பிய துயர்
போலவே துடிக்கிறோம் ஐயா!
நூறாண்டு சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அறுத்திட முடியுமா ஐயா!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
ந.இராசேந்திரன் "அன்பகம்"
சிறப்பிட்டி மத்தி, நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(43651) (39-38-14-15)

# ஆலயத் தொண்டில் பிள்ளைகளை ஈடுபடுத்த பெற்றோர்களே ஊக்குவிக்க வேண்டும்

வலி.வடக்கு,மார்ச்31

ஆலயத் தொண்டுகள் செய்வதால் எம பிறவியின் பயனை அடையமுடியும். இன்றைய இளம் சமூகத்தினர் இத்தொண்டுகளைச் செய்ய ஆர்வம் காட்டுவதில்லை. இந்நிலையை மாற்றப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும்.

மேற்கண்டவாறு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பெண்கள் தொண்டர் சபையின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வுகள் அண்மையில் துர்க்கையம்மன் ஆலய துர்க்கா மணி மண்டபத்தில் ஆலயத் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற்றன.

தொடர்ந்து உரையாற்றிய ஆறு.திருமுருகன் கூறியதாவது:-

ஆலயத்தில் நடைபெறும் புனிதமான நாள்களில் ஒன்றாக இன்றைய நாளும் அமைந்து காணப்படுகின்றது. இந்த ஆலயத்தின் புனிதத் தன்மையையும் தெய்வீகச் சூழ் நிலையைப் பற்றியும் அனைத்து இடங்களிலும் பேசப்படுகின்றது. இந்த நிலைக்குப் பெண்கள் தொண்டர் சபையின் பெரும் பங்களிப்பும் காரணமாக இருக்கின்றது.



ஆலயத் தொண்டு என்பது மிகவும் அற்புதமான தொண்டாகும் இது ஒரு நாளும் வீண் போனதில்லை. இப்பணியில் ஈடுபடுபவர்களும் சரி அவர்களுடைய குடும்பங்களும் பிள்ளைகளும் சரி நல்ல அமைதியான-சந்தோஷமான-வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

பெண்கள் தொண்டர் சபையில் கடமையாற்றும் தாய்மார்கள் தமது பிள்ளைகளையும் சிறுவயதிலேயே இத்தகைய பணிகளில் ஈடுபடுவதற்குப் பழக்கிக்கொள்ள வேண்டும். ஆலயப் பணியென்பது என்றும் பயனுடைய ஒரு பணியாகும்.

இன்றைய சமூகத்தில் தொண்டு செய்யும் மனப்பக்குவம் இளைய சமூகத்திடம் வளர்க்கப்படவில்லை. ஆலயப் புனிதப் பணிகளில் ஈடுபடுவது என்பது மனத்திற்கு மகிழ்ச்சி அளிப்பதாகும். ஆலயம் வரும் அடியார்களுக்குத் தொண்டாற்றுவது ஒரு புனிதப் பணிதான் இது பெருமைக்கும் உரியதாகும்.

வாழ்க்கையில் நாம் எந்தவொரு பொருளுக்கும் ஆசைப்படக்கூடாது. அநுபூதிமான்கள் ஆலயத்தில் கிடந்த பொன்னைக் கூட குப்பையாகக் கருதி குப்பைத் தொட்டிகளில் போட்டு ஆலயத் தொண்டாற்றியுள்ளார்கள்.

இந்த வகையிலேயே, துர்க்காதேவி ஆலயத்தில் கடமையாற்றும் பெண்கள் தொண்டர் சபை உறுப்பினர்களும் மற்றும் இந்து இளைஞர் சங்கத் தொண்டர்களும்கூட ஆலயச் சூழலில் கண்டெடுக்கும் எந்த ஒரு பொருளையும் தொலைத்த அடியார்களிடம் கையளிப்பதில் அக்கறையாகச் செயற்படுகின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.(ப-86-204)

# சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தினால் திறமையானவர்களாக உருவாகலாம்

வலி.வடக்கு, மார்ச்31

வசதி வாய்ப்புக்கள் மிக்க நகரங்களில் மட்டும்தான் திறமையான வீரர்கள் உருவாகுகின்றார்கள் என்ற நிலைமாறி, சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திப் பலரும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகிறார்கள். இன்று ஐந்தாவது வருடமாகவும் நடைபெற்ற நாயகர்களின் துடுப்பாட்டப் போர், இதனையே வெளிக்காட்டி நிற்கின்றது.

- மேற்கண்டவாறு மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளர் மா.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான நாயகர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியின் ஐந்தாவது வருடப் போட்டி மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.




இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மா.சந்திரகாந்தன் தெரிவித்ததாவது:-

இப்போட்டிகள் சிறப்புறக் காரணமாக இருந்த ஸ்கந்தாவின் நடராசா ஆசிரியரையும் மகாஜனாவின் காராளசிங்கம் ஆசிரியரையும் பாராட்டுகின்றேன். இன்று இடம்பெற்ற ஆட்டமானது மிகவும் விறுவிறுப்பான ஆட்டமாக அமைந்தது. வெளியில் இருந்து காட்டிய ஆரவாரமும் மகிழ்ச்சியும் விளையாட்டின் விறுவிறுப்பை அதிகப்படுத்தின.

மாணவர்கள் மத்தியில் விளையாட்டுக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்தவை. இது உடலையும் உள வளர்ச்சியையும் வளர்க்கச் செய்கின்றன. விளையாட்டை விளையாட்டாகக் கொள்ள வேண்டும், இதில் போட்டி இருக்கவேண்டும். பொறாமை இருக்கக்கூடாது.

முன்னர் ஒரு காலத்தில் நகர்ப்புறத்தில்தான் ஒரு சில விளையாட்டுக்களின் வளர்ச்சி தங்கி இருந்தது. இன்று இந்நிலைமை மாற்றப்பட்டுள்ளது. கிராமப் புறத்திலும் விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளார்கள் என்பதை இந்தப் போட்டிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

விளையாட்டில் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் விளையாட்டுக்கள் எதற்காக உருவாக்கப்பட்டவை என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். நட்புக்காக உருவாக்கப்பட்ட இந்த விளையாட்டை நல்லமுறையில் புரிந்து, அதனுடைய தத்துவத்திற்கு ஏற்ப விளையாட வேண்டும் - என்றார்.

யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும் பழைய மாணவருமான ரோகான் இராஜசிங்கம் உரையாற்றும்போது கூறியதாவது:-

வீரர்களின் திறமையை வெளிக்கொண்டு வரவேண்டுமானால் இப்போட்டியை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மகாஜன மைதானம் போதிய இடவசதியைக் கொண்டிருக்கவில்லை. இது எனது தனிப்பட்ட கருத்தும் வேண்டுதலுமாகும்.

இடம்பெயர்தலைத் தொடர்ந்து கிராமப் புறங்களிலும் கிரிக்கெட் நல்லமுறையில் விளையாடப்படுகின்றது. இன்றைய போட்டி மிகவும் நல்ல முறையில் விளையாடி இடம்பெற்றுள்ளது. இதேபோன்று, எதிர்காலத்திலும் பிரச்சினைகள் எதுவும் இன்றி விளையாட்டுக்கள் விளையாடப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜியும் உரையாற்றினார்.(ப-86-204)

# இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகமாக இருக்கும் இராணுவ முகாம்களை உடன் அகற்றுக!

## பாலியல் வல்லுறவு எதிர்ப்புக் கூட்டத்தில் மாவை எம்.பி.



யாழ்ப்பாணம்,மார்ச்31

மக்கள் வாழும் இடங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகமாக இருக்கும் இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

- மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ் மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சோ.சேனாதிராசா.

நீர்வேலியில் வயோதிப மாது இராணுவச் சிப்பாயினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சம்பவத்தைக் கண்டித்து இடம்பெற்ற கண்டனப் பேரணியைத் தொடர்ந்து நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய முன்றிலில் செல்வி செ.ப.மகிழினி தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு மாவை சேனாதிராசா உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

கடந்த சில ஆண்டு காலத்தில் பல பாலியல் வல்லுறவுகள், வல்லுறவு முயற்சிகள் பலவற்றில் சிறிலங்காவின் ஆயுதப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இத்துடன், பெண்கள் இருக்கும் நேரங்களைப் பார்வையிட்டு அத்துமீறி வீடுகளுக்குள் பிரவேசிப்பதும் பெண்களை இரவு நேரங்களில் சென்று கைதுசெய்வதும் என பல அடாவடித்தனமான செயற்பாடுகளும் இம்மண்ணில் இடம்பெற்றுள்ளன.

எமது தமிழப் பெண்களைக் கற்பழிப்பதும் மானபங்கப்படுத்துவதும்கூடத் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இத்தகைய செயற்பாடுகளை நாம் தொடர்ந்து அங்கீகரிக்க முடியாது. இது இன்னும் தொடருமாக இருந்தால் இதனை முறியடிப்பதற்கு மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

குடியிருப்புக்களில் உள்ள இராணுவ முகாம்களைச் சந்திரிகா அரசு அகற்றத் துரிதமாகச் செயற்படவேண்டும். இல்லையேல், சர்வதேச நாடுகள் இத்தகைய முகாம்களை அகற்ற அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இதற்கு நாம் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இல்லையேல் நாம் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை நடத்தவேண்டும். இதன் மூலம் அரசுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இராணுவ முகாம்களை மக்கள் குடியிருப்புக்களில் இருந்து அகற்றுவது சம்பந்தமாக அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழ்ப் பெண்கள் மீது திட்டமிட்ட முறையில் சிங்களப் பேரினவாத அரசு பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இது இன்று நேற்று நடைபெறும் செயலன்று. இம்மண்ணில் ஒரு போலியான அமைதிச் சூழ்நிலையை வெளியுலகுக்குக் காட்டிக் கொண்டு பயங்கரமான அட்டூழியங்களை இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவருகின்றனர்.

30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிலங்காவின் ஆயுதப் படையினர் யாழ் குடாநாட்டில் தேவையற்ற முறையில் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ் இனத்தினதும் பெண்களினதும் மானத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய சூழ்நிலைகளும் சம்பவங்களும் தொடருமாக இருந்தால் எமது இறுதியான போராட்டத்தை நடத்தி எமது விடுதலையை நாமே பெற்றுக்கொள்வோம்.

நாமும் சுதந்திரமாக வாழவும், நடமாடவும் அரசு வழிவிட வேண்டும். இல்லையேல் நாம் எமது பாதையில் செல்வதற்கு அரசு இடமளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் உரையாற்றும்போது:-

தொடர்ச்சியான போராட்டங்களை மக்கள் முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதன்மூலமே அரச பேரினவாத ஆக்கிரமிப்புப் படைகளின் அட்டகாசத்தை இம்மண்ணில் இல்லாது ஒழிக்க முடியும்.

வயோதிபப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட செயல் வெறுக்கத்தக்கதும் அருவருக்கத்தக்கதுமான ஒரு செயல் ஆகும். இத்தகைய செயற்பாடுகள் தமிழ்ப் பெண்கள் மீது ஏற்படுவதற்கு எதிர்காலத்தில் இடமளிக்கக்கூடாது எனவும் வேண்டிக்கொண்டார். (ப-86-204)

# வணிகக் கல்வியுடன் ஆங்கிலமும் தொழில்நுட்பமும் அவசியம்



வலி.தெற்கு,மார்ச்31

"வணிகக்கல்வியானது தொழில் நுட்பத்துடன் கூடிய தேசிய தொடர்புகளைக் கொண்டது. அண்மையிலே ஆசிய தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய இரண்டையும் வணிகக் கல்வி இணைத்துக்கொண்டிருக்கிறது. வணிகக் கல்வியுடன் ஆங்கிலததையும் தொழில் நுட்பத்தையும் கற்கவேண்டும். இதற்கூடாக எதிர் காலத்தில் சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளமுடியும், வணிகக்கல்வியும் பெருமை பெறும்."

உடுவில் மகளிர் கல்லூரி வணிக மன்றத்தினரால் முதன்முதலாக வெளியிடப்பட்ட "வணிக முன்னேற்றம்" நூல் வெளியீட்டின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா இவ்வாறு கூறினார்.

வணிக மன்றத் தலைவர் செல்வி ஜீன் பிரவீனா ராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவினை மன்றச் செயலாளர் செல்வி திருவேணி சோமசுந்தரம் முன்னின்று நெறிப்படுத்தினார்.

வரவேற்புரையை செல்வி ராஜஜீவா சுப்பிரமணியமும் வாழ்த்துரையை கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸூம் நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் க.தேவராஜா தமது உரையில் மேலும் கூறியதாவது:-

ஒரு காலத்தில் வைத்தியம், பொறியியல் சார் கல்விக்கு இணையாக விளங்கிய வணிகக கல்வி இடைக்காலத்தில் சற்றுத் தொய்வடைந்திருந்தது. வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படாமையால் வணிகக்கல்வியைக் கற்பதற்கு மாணவர் சற்றுப் பின் வாங்கினர். ஆனால், இன்று சகல பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டதனால் மீண்டும் வணிகக்கல்வி புத்துயிர் பெற்று வளர ஆரம்பித்துள்ளது.

இக்கல்லூரியில் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டல் இருப்பதனால் வணிகக்கல்வி மட்டுமல்ல, ஏனைய கல்வித்துறைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியுடன் நின்றுவிடாது ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றிலும உடுவில் மகளிர் கல்லூரி சிறந்து விளங்குகிறது.

இன்று வெளியிடப்படும் 'வணிக முன்னேற்றம்' என்ற நூல் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பயனுள்ள நூலாக அமைந்துள்ளது. வர்த்தக மாணவர்களின் அறிவு, ஆளுமை என்பவற்றை வெளிப்படுத்தும் நூலாகப் பல புதிய விடயங்களையும் தகவல்களையும் கொண்டு வெளிவந்துள்ளது - எனக் கூறினார்.

நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.இரட்ணம் கூறியதாவது:-

மாணவர்களின் தலைமைத்துவம், ஆற்றல் என்பவற்றை வெளிப்படுத்தும் 18 கட்டுரைகள் இந்த நூலில் காணப்படுகின்றன. கட்டுரைகள் அமைய வேண்டிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆற்றொட்டமான கருத்துக்களைத் தொகுத்துள்ளார்கள். ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் உசாத்துணை நூல்களை மேவி எழுதப்பட்டுள்ள இந்த நூல் ஏனைய சஞ்சிகைகளுக்கு முன்மாதிரியாகக் காலத்தேவையைக் கருத்திற்கொண்டு வெளியிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்று கூறினார்.

இதழாசிரியர் செல்வி ஸ்ரீவானதி ஸ்ரீதயாளன் பதிலுரை வழங்கினார். ஆசிரி[illegible]கள் எஸ்.எஸ்.மனோகரன், கே.உதயன், எ[illegible]பகில்ஸ் ஆகியோரும் உரையாற்றினர். (ப-152-204)

# கலைஞர்களைக் கௌரவிப்பதன் மூலம் பாரம்பரியக் கலைகளைப் பேணலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

எமது பாரம்பரியக் கலைகள் பேணப்பட வேண்டுமானால் கலைஞர்கள் போற்றப்படவும், கௌரவிக்கப்படவும் வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன். நயினாதீவு தம்பகைப்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு கலைஞன் என்பவன் சாதாரணமானவன் அல்லன். அவன் ஒரு சமூகத்தை உருவாககும் சிற்பியாகிறான். எமது பாரம்பரியக் கலைகள் போற்றப்பட வேண்டியவை. அந்தக் கலைகள வாழ வேண்டுமானால் எம் மத்தியில் வளரும் கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டும்.

வாழும் காலத்திலே ஒரு கலைஞன் கௌரவிக்கப்படும்போதுதான் அவன் வாழ்க்கையின் அர்த்தத்தை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். இதனை விடுத்து, இறந்ததன் பின் பாராட்டிக் கௌரவிப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை - என்றார்.

நிகழ்விற்குத் தலைமைதாங்கிய சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்பு கேஸ்வர மங்களேஸ்வரக் குருக்கள் தனது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

எமது பாரம்பரியக் கலைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற கலைஞர்கள் இலை மறை காயாக எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைச் சமூகத்துக்கு இனங்காட்டவேண்டும். அவர்களது சேவைகள் அர்ப்பணிப்புக்களை ஒவ்வொரு தனிமனிதனுக் கும் தெரியப்படுத்த வேண்டும். இதற்கு இத்தகைய பாராட்டு விழாக்கள் துணைபுரிகின்றன - என்றார்.

(ப-13-204)

மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபன விவகாரம்:

# அரசை மிரட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு,மார்ச்31

ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் மிரட்டல் விடுத்துள்ளது. இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தனியார் மயப்படுத்தும் விடயம் தொடர்பாக அரசு உறுதியான முடிவை இரு வாரத்துக்குள் அறிவிக்காவிட்டால் நாடுமுழுவதும் பொது வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர்களும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுமான டாக்டர் ராஜித சேனாரத்னவும், பந்துல குணவர்த்தனவும் கூட்டாக இந்த எச்சரிக்கையை விடுத்தனர். ஐ.தே.க. கட்டுப்பாட்டில் இயங்கும் ஜாதிக சேவக சங்கத்தின் தலைவர் ஆனந்தவும் அவர்களுடன் இருந்து நிலைமைகளை விளக்கினார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைத்து, அவற்றை அபிவிருத்தி செய்வதை ஐ.தே.க. எதிர்க்கவில்லை. ஆனால், அவற்றின் பெரும்பான்மையான பங்குகளும் நிர்வாக அதிகாரமும் அரசிடமே இருக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருந்தோம்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் எவரும் ஏகபோக உரிமை எடுக்கமுடியாது. போட்டியை ஏற்படுத்தி எரிபொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும் என்பதாலேயே இந்தியன் எண்ணெய்க் கம்பனிக்கு கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கினை எமது ஆட்சிக்காலத்தில் விற்றோம்.

மேலும் ஒரு பகுதியைப் சீனக் கம்பனி ஒன்றுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால், சீனக்கம்பனியைவிட பல மடங்கு குறைவான விலையைக் கேட்ட பாரத் எண்ணெய்க் கம்பனிக்கு கூட்டுத்தாபனத்தை இரகசியமாக இந்த அரசு விற்றுவிட்டது.

இதனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இந்தியா ஏகபோக உரிமையைப் பெற்றுவிட்டது. அரசு இதனை மூடி மறைக்கிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தனியார் மயப்படுத்தலைத் தாம் எதிர்க்கிறார் எனவும், அங்கு என்ன நடைபெற்றுள்ளது என்பது தமக்குத் தெரியாது என்றும் கூறுகின்றார். இப்படியான ஒரு பொம்மைதான் ஜனாதிபதியின் 'டம்மி' யாகச் செயற்படுகின்றது. கூட்டுத்தாபனத் தலைவர் சுயகௌரவம் உள்ளவராக இருந்தால், தனது பதவியை அவர் இராஜினாமாச் செய்யவேண்டும்.

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தித் தீர்வுகாண்பார் என ஜனாதிபதி பாசாங்கு காட்டுகிறார். ஜே.வி.பியினர் தமது திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள ஆதரவைக் கேட்டுள்ளனர்.

ஆனால், நாங்கள் ஜனாதிபதிக்கு இரண்டு வாரகால அவகாசம் கொடுத்துள்ளோம். அதற்குள் அரசு உறுதியான நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். இல்லையேல், ஐ.தே.கவும் நாடு முழுவதும் பொது வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தும் - எனவும் அவர்கள் கூறினர்.

ஜே.வி.பியினரின் போராட்டப்பிடிக்குள் சிக்கியிருக்கும் அரசுக்கு இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியும் மிரட்டல் விட்டுள்ளது. இதனால், ஜனாதிபதிக்கு மேலும் நெருக்கடி அதிகரித்துள்ளது. (க-3)

# அமெரிக்கா தந்த போர்க் கப்பல் கடற்படைக்குப் பெரும் உந்துசக்தி

## கடற்படைத் தளபதி பெருமிதம்

கொழும்பு,மார்ச்31

அமெரிக்கா அன்பளிப்புச் செய்த போர்க் கப்பல் இலங்கை கடற்படையினருக்குப் பாரிய உந்துசக்தியை வழங்கியுள்ளது. கடற்பரப்பைக் கண்காணிப்பதில் 75 வீதமான பங்கை அது பூர்த்திசெய்யும்.

- இவ்வாறு பெருமிதம் கொள்கிறார் கூட்டுப் படைத்தளபதியும் கடற்படைத் தளபதியுமான ரியர் அட்மிரல் தயா சந்தகிரி.

அமெரிக்கக் கடற்படையினரால் இலங்கைக் கடற்படைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 'கரேஜஸ்' என்ற போர்க் கப்பல் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக இலங்கைக் கடற்படையில் இணைக்கப்பட்டது.

கப்பலை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அட்மிரல் தயா சந்தகிரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

இலங்கைக் கடற்படைக்கு இந்த யுத்தக் கப்பல் கிடைத்ததன் மூலம் நாம் பாரிய பலத்தைப் பெற்றிருக்கின்றோம். எமது கடற்பரப்பில் 75 வீதமான பகுதிகளைக் கண்காணிக்கக்கூடிய வளம் இதன் மூலம் எமக்குக் கிடைத்துள்ளது. கப்பலை இலவசமாக வழங்கிய அமெரிக்கக் கடற்படையினருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

2004ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இந்தப் போர்க் கப்பல் சுமார் 60 கோடி ரூபா செலவில் திருத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் அது உத்தியோகபூர்வமாகக் கடற்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் வரிசையில் பி-621 என்ற தொடர் இலக்கத்துடன் இந்தக் கப்பல் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. (க-3)

# அரசின் முதலாண்டு நிறைவை ஒட்டி எளிமையான நிகழ்ச்சிகள் மட்டுமே!

## கோலாகல வைபவங்கள் ரத்து

கொழும்பு,மார்ச்31

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஒருவருட ஆட்சிப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கோலாகல வைபவங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஆட்சியின் ஒரு வருடப் பூர்த்தியை எளிமையான முறையில் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு நினைவு வைபவமொன்றை நடத்துவது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் அநுர பண்டாரநாயக்காவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேச்சு ஒன்று நடைபெற்றது.

அமைச்சர்களான அநுர பண்டாரநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தினேஷ் குணவர்த்தன, ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, ஈ.பி.டி.பி. ஆலோசகர் தவராசா ஆகியோர் இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான அச்சமான சூழ்நிலை தொடர்ந்தும் நிலவுவதால் இந்த வருடப் பூர்த்தி நிகழ்வை அமைதியான முறையில் கொண்டாடுவதென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் எதிர்வரும் இரண்டாம் திகதி அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதியில் காலை சமய அனுஷ்டானங்களை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னர் அங்கு நடைபெறும் எளிமையான நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகாவைத் தலைமை வகிக்கச் செய்வதெனறும் இங்கு மேலும் முடிவெடுக்கப்பட்டது.(க-3)


## 60ஆவது அகவை காணும்



**சிவமணி பாலச்சந்திரன்**

பல்லாண்டு வாழ
பாசமுடன் வாழ்த்துகிறோம்
ஆசிரிய சேவையை
நிறைவு செய்து
ஓய்வுபெறும் இவர்
நீண்ட ஆயுளும்
சீரும் சிறப்பும்
நிறைந்த வாழ்க்கையும் பெற
வாழ்த்தி நிற்கும்.

**சகோதர, சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள்.**

(43664)(26-14-34)


# ஆழிப்பேரலை பயத்தில் வெளியேறிய இராணுவத்தினர் முகாம் மீண்டனர்

கொழும்பு,மார்ச்31

ஆழிப்பேரலை ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக வடக்கு - கிழக்கு கரையோரங்களில் தமது முகாம்களில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குப் பின் வாங்கிய இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் தமது பழைய நிலைகளுக்கு மீண்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் குறித்து ஊடகங்களில் அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில் இராணுவத்தினர் தமது சுடுகலன்களுடனும் மூடை முடிச்சுகளுடனுடன் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றுவிட்டனர். அனர்த்தம் எதுவும் இனி ஏற்படாது எனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் தமது முகாம்களுக்குத் திரும்பி வரத் தொடங்கினர்.

நாகர்கோயில், மட்டக்களப்பு, பருத்தித்துறை, மாதகல், திருகோணமலை, நிலாவெளி போன்ற கரையோர முகாம்களில் உள்ள தமது நிலைகளில் சுடுகலன்களை மீண்டும் உரிய இடங்களில் பொருத்தும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் பற்றி அறிவித்தல கிடைத்தால் உடனடியாக இராணுவ உபகரணங்களை அகற்றுவதற்கான ஏற்பாடுகளுடனேயே இராணுவத்தினர் தற்போது முகாம்களில் நிலைகொண்டுள்ளனர். (க-3)

# சமாதானச் சுவரொட்டிகள்

தென்மராட்சி,மார்ச்31

'இந்தச் சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்தும் பாதுகாக்க எமக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்' என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் சாவகச்சேரி நகரப் பகுதியில் காணப்பட்டன.

'பொதுமக்களுக்கான அறிவித்தல்' என்னும் தலைப்பிலான இந்த சுவரொட்டிகளைப் பாதுகாப்புப் படையினர் வெளியிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)


## இலங்கை மின்சார சபை – யாழ். பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 2005-04-09 | உரும்பிராய், கோண்டாவில், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதி |
| 2005-04-16 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 2005-04-30 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, - யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 2005-04-23 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |
| 2005-05-14 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை. |
| 2005-05-21 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

*இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.*

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்" இலங்கை மின்சார சபை.*

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி-41893)(26-14-34) எனது இல.வமா./யா/வ/விளம்.



## தவறிவிடப்பட்டுள்ளது

கடந்த 28-03-2005 அன்று வல்வை நாற்சந்திக்கும் - வல்வெட்டித்துறைச் சந்திக்கும் இடையில் தேசிய அடையாள அட்டையும் (770041724V) விசேட அடையாள அட்டையும் சில முக்கிய ஆவணங்களும் அடங்கிய பிறவுண்கலர் 'பேஸ்' தவறவிடப்பட்டுள்ளது. மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளோம். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்

துரைசிங்கம் - வீரசிங்கம்,
15ஆம் கட்டை, உடுப்பிட்டி
T.P.: 0777162632, 021 222 7631
தொடர்புகொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(43663)



## பாடசாலை அதிபர் வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பாடசாலைத் தரத்திற்கேற்ப யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் பொருத்தமான அதிபர், ஆசிரியர் சேவைகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
02. யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
03. யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
04. யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை
05. யா/நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை
06. யா/புத்தூர் மெ.மி.த.க.பாடசாலை

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15-04-2005 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் *'வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணத்திற்கு'* அனுப்பிவைக்கவும்.

**வே.தி.செல்வரத்தினம்,**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-41894)(26-14-34)



## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

உதயம் 05 - 04 - 1934



அஸ்தமனம் 02 - 04 - 2002

**அமரர் கந்தையா இராசலிங்கம்**

திதி: 30-03-2005

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உம் அன்பு முகம் மறையவில்லை
என்றும் எம் உள்ளத்தில் நீங்காத
நினைவாக நிலைத்திருக்கும் எம் அப்பா!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.*

இல.14, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(43666)(26-14-34)

# 6

# பில்லியன் மூலதனம்!

எக் காலத்திலாவது இது வெல்லப்பட முடியுமா?

SRI LANKA INSURANCE CORP. LTD.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

**எமது தலைமைத்துவம்**
**எக் காலத்திலும் வெல்லப்பட முடியாதது!**

*செயற்பாட்டிலிலுள்ள மொத்த மூலதனம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள புதிய லான்ட் மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: வே.சிங கம், முல்லை வீதி, பரந்தன், T.P.:077 3114583. (43671)

தரமான கொங்கிறீற் கல் விற்பனைக்குண்டு. குறைந்த கட்டணத்துடன் குறிப்பிடப்படும் இடத்திற்கு லொறி, ரக்ரர் மூலம் ஏற்றித்தரப் படும். தொடர்பு: வ.காந்தன், வீரசிங்கம் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை (கமலாம்பிகை வித்தியாலயம் அருகில்) T.P.: 077 - 6550962. (43646)

### கார் விற்பனைக்குண்டு

நிசான் சனி, சுப்பர் சலூன் குளிரூட்டப் பட்ட சில்வர் நிறக்கார் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 077 7283795 (மாலை 6 மணிக் குப் பின்) (43678)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler மற்றும் Prima பேட்டுக்குஞ்சுகள் (சிவப்பு) உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43638)

### தவறிவிட்டது

கொக்குவில் நந்தாவில் அம்மன் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பிறேமராஜ் என்பவரு டைய காணி உறுதி ஒன்று 28-03-2005 திங் கட்கிழமை ஆடியபாதம் வீதியில் திருநெல் வேலிப் பகுதியில் முழு ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 38, கோயில் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும். சன் மானம் வழங்கப்படும். (43661)

28-03-2005 அன்று ஓமந்தை சோதனைச் சாவடியில் கறுப்பு நிறப் பிரயாணப்பை (உடு புடைவைகள் அடங்கியது) ஒன்று தவறிவிட் டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் க.சிவ குமார், முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P.: 077 6183263. (43665)

### காணவில்லை

சிவப்பு நிற கேப்பை இன நாம்பன் மாடு ஒன்றும் ஒரு மாதத்தில் கன்று ஈனும் (மயிலை) பசுமாடு ஒன்றும் கடந்த வியாழக்கிழமை வட்டுக் கோட்டை பழைய ஆஸ்பத்திரி வீதியில் காணா மல போயுள்ளன. தகவல் தருபவர்களுக்கு 5000 ரூபா சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சோ. மகாலிங்கம், கனகரத்தினம் வீதி, வட்டுக் கோட்டை. (C/41882)


## மாணவர்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்31

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 670 பேருக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு 4 இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் பாடசாலை மாணவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் மூவாயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன என்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்ல தம்பி தெரிவித்தார். (ஒ-7)

## கல்வி மேம்பாட்டுப் பேரவை விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் ஜி.சீ.ஈ. உயர்தர பாடச்சேர்க்கைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை கடந்த 02-03-2005 உதயனில் பிரசுரமாகி இருந்தது.

தங்களின் அந்த அறிக்கையில் இரு தவறுகள் இடம்பெற்று விட்டன என்று கல்வி மேம்பாட்டுப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கிறது.

அந்த அறிக்கையை யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை யின் சார்பில் மாணவர் கல்வி மேம்பாட்டுக் குழு உறுப்பினர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் தயாரித்திருந்தார் என்றும் -

கட்டுரையில் பெயர் குறிப்பிட்டிருக்கும் அ.மு.அருணாசலம் என்பவர் யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் (உறுப் பினர் அல்லர்) என்றும் -

கல்வி மேம்பாட்டுப் பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


உ

### ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளி நாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகைமூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839
Mobile: 0776 923623.
(C/41868)(26-14-34)


## வடமராட்சிப் பகுதியில்

## சுனாமி பாதித்த குடும்பங்களுக்கு புனர்வாழ்வு நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்31

வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டுத் தற்போது இடைத்தங்கல் முகாமில் அமர்த்தப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவு வதற்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூன்றுகோடி ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ள நான்கு இடைத்தங்கல் முகாம்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பராமரித்து வருகின்றது.

இவற்றில் கற்கோவளம் இடைத்தங்கல் முகாமில் 325 குடும் பங்களும் சேந்தான்குளம் இடைத்தங்கல் முகாமில் - 51 குடும்பங்களும் தும்பளை கிழக்கு இடைத்தங்கல் முகாமில் - 194 குடும்பங்களும், நாகர்கோவில் இடைத்தங்கல் முகாமில் - 140 குடும்பங்களும் தங்கி யுள்ளன.

இவர்களுக்கு முதற்கட்டமாக அண்மையில் ஒரு கோடிரூபா பெறு மதியான வீட்டுத் தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள், உடுபுடை வைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அடுத்தகட்டமாக 2 கோடி ரூபா செலவில் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார். (ஒ-7)


### அம்புலன்ஸ் வாகனச் சாரதி தேவை

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வாகனத்திற்குச் சாரதி தேவைப்படு கிறார். A ரக சாரதி அனுமதிப்பத்திரமும் பத்து (10) வருடங் களுக்குக் குறையாத அனுபவமும் சேவை மனப்பான்மையும் உடை யவர்கள் 03-04-2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்குக் கீழ்காணும் முகவரிக்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக் கவும். யாழ்.நகரப் பகுதியின் 5 கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயம்,**
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.பே.இல. 021 222 3166.
(43681)(26-14-34)

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையிலுள்ள திரு.திருமதி **பாலகிருஷ்ணன் - றஜனி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜாகரன் முதலாவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் இன்று (31.03.2005) வியாழக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடு கின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, லக்ஷி அக்கா, அப்பம்மா, தாத்தாமார், அம்மம்மாமார், சித்தி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், அண்ணிமார், பெரியப்பா மார், பெரியம்மாமார், சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கணபதியின் அருள் பெற்றுச் சீருஞ்சிறப்புடனும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்து கின்றார்கள்.

தகவல்: **கி.பாலகிருஷ்ணன்**
(பாலன் - தந்தை).

இல.11, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(43623)(50-14)

பாலகிருஷ்ணன் கஜாகரன்

### தவறிவிட்டது

டென்மார்க், செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட ஆலோசகர் செல்வி கரின் எரிக்சென் அவர்களின் அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிறத்தோல் கைப்பை குறிகாட்டுவான், யாழ்ப்பாணப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். தக்க சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: செயலாளர்,
**இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,**
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2561.
(43680)

### GOBY ARTS (கோபி ஆட்ஸ்)

பிளாஸ்ரிக் (டிஜிட்டல், ஸ்ரிக்கர்)
விளமபரப் பெயர்ப்பலகைகள்,
இலக்கத் தகடுகள்,
ஸ்ரிக்கர்கட்டிங், கணனிப் பிரதிகள்
என்பன சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

**923, நாவலர் வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**
(மாம்பழம் சந்தி அருகில்).
(43685) (39)

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sony T.V. (Japan), VEDIO டெக், AUDIO DUB டெக், PIONEER செற், DVD MP3 பிளேயர், AUDIO கெசற் டெக், அம்பு என் பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **ஜெகன் வீடியோ, ஓடியோ சென்ரர்**
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.
T.P.: 077 6547245
(43682)

### தசாக கிரஹ யக்ஞ அழைப்பு

(இடம்மாற்றத்தைக் கவனத்திற் கொள்ளவும்)

*அன்புடையீர்!*

நிகழும் தாரண வருஷம் பங்குனி 14ஆம் நாள் 27-03-2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தவரான

**பிரம்மஸ்ரீ கந்ததாசக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் (விக்கல் ஐயா)**

*(முன்னாள் பிரதமகுரு, மண்டைதீவு முத்துமாரியம்மன் கோயில், சிறுப்புலம் கந்தசுவாமி கோயில்)*

அவர்களின் இறுதிக்கிரியைகள் 28-03-2005 திங்கட்கிழமை சாவகச்சேரி, மீசாலையில் நடை பெற்றன. 29-03-2005 செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறவேண்டிய சகல ஆத்மசாந் திக்கிரியைகளும் *யாழ்ப்பாணம், வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி, பிரம்மஸ்ரீ ச.சிவ சாமிக்குருக்கள்* அவர்களது இல்லத்தில் நடைபெற்று வருகின்றன.

**நிகழ்ச்சி விவரம்**

| | | |
|---|---|---|
| 05-04-2005 | செவ்வாய் | பகல் 9.00 மணி - தசாகம் |
| 06-04-2005 | புதன் | பகல் 9.00 மணி - ஏகோதிஷ்டம், மாசியம் |
| 07-04-2005 | வியாழன் | பகல் 9.00 மணி - சபிண்டீகரணம் |
| 10-04-2005 | ஞாயிறு | நண்பகல்12.00 மணி - சமாராதனை (மதியபோசனம்) |

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டு மேற்படி கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம் பணிவுடன் வேண்டுகின்றோம்.

**பிரம்மஸ்ரீ பா.சபாரத்தின சர்மா**
(மகன் - காரைநகர் ),
**பிரம்மஸ்ரீ பா.நடேசக்குருக்கள்**
(மருமகன் - மன்னார்).

வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (43688)(26-14-34)

### 25 ஆவது ஆண்டு திருமண நிறைவு விழா



திரு. திருமதி
**செல்வராஜா சாரதா** *தம்பதிகள்*

31.03.2005

மணநாளில் வெள்ளி விழா
காணும் எம் பெற்றோரே– எம்
வாழ்வுக்கு வழி காட்டிய
கரங்களை ஆறவைப்போம்– எம்
வாழ்த்துக்கு செவி காட்டிய
உங்களை வாழவைப்போம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
வைரவர் கோயிலடி,
சுன்னாகம்.

பிள்ளைகள்:
செந்தூரன், சென்றோஜி,
தினோஜி, செல்வஜெனோஜி.
(43690) (39-14-34-26)

# சுமாத்திராவில் நேற்று மற்றொரு நில அதிர்வு!

## அச்சத்தில் மக்கள் ஓட்டம்

சுமாத்திரா,மார்ச்31

சுமாத்திரா தீவில் நேற்று அதிகாலை இலங்கை நேரப்படி 2.42 மணியளவில் நில அதிர்வு ஏற பட்டது 5.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு காரணமாக அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த திங்களன்று ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாகவே மேற்படி நில அதிர்வு ஏற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

8.7 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்திற்குப் பிறகு சுமாத்திராத் தீவருகே 15 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் பெரும் பீதியுடன் காணப்பட்டனர். வீடு, அலுவலகங்களுக்குள் செல்ல முடியாமல் வீதிகளிலும் வெட்ட வெளிகளிலும் மக்கள் தங்கியிருந்தனர்.

மீண்டும் மீண்டும் ஏற்படும் நில அதிர்வுகள் காரணமாகச் சுமாத்திராத் தீவின் அருகிலுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் பீதியுடன் உள்ளனர் என்று செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (8)

## பாப்பரசருக்கு மீண்டும் உடல் நலக்குறைவு



பாப்பரசர், ஜோன் போல் கடந்த சில காலமாகவே பார்க்கின்சன் நோய், மூச்சுத்திணறல் உடபட பல்வேறு கோளாறுகளால் அவதிப்பட்டு வந்தார்.

84 வயதான அவர், கடந்த மாதம் ரோம் நகரில உள்ள ஜெர்மிலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொண்டையில் சத்திரசிகிச்சை நடந்தது. அவரது தொண்டையில் இருந்து நுரையீரலுக்கு ஒரு குழாய் பொருத்தப்பட்டது. இதனால் அவருக்கு மூச்சுத்திணறல் நீங்கியது.

ஆஸ்பத்திரியில் இருந்து அவர் வத்திக்கான் நகருக்குத் திருப்பினார். ஆனாலும் உடல் நலம் முழுமையாகத் தேறவில்லை.

பாப்பரசரால் இப்போது உணவை விழுங்க முடியவில்லை. திரவ உணவைக் கூட அவரால் சரிவரச் சாப்பிடமுடியவில்லை. இதனால் அவர் மேலும் சோர்வு அடைந்த நிலையில் உள்ளார்.

இதைத் தொடர்ந்து அவரை மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க முடிவுசெய்து இருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில் அவருக்குத் தொண்டையில் மீண்டும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. தொண்டையில் துளைபோட்டு அதன வழியாக வயிற்றுக்குள் ஒரு குழாயைப் பொருத தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (8)



சுமாத்திராவில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தில் இந்தோனேசியாவில் உள்ள 'குனுங்சிட்டோலி' நகரில் பெரும்பாலான கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன. அந்தக் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள். (8)

# சுமாத்திராவில் மீண்டும் பூகம்பம் ஏற்படுமென நிபுணர்கள் எச்சரிக்கை

லண்டன்,மார்ச்31

இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவின் அருகே கடல் பகுதியில் மீண்டும் ஒரு பயங்கர நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன என்று பிரிட்டிஷ் புவியியல் நிபுணர் ஜோன் மெக்கிலாஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மூன்றாவது நிலநடுக்கம் மிகப் பயங்கரமாக இருக்கும் என்றும் -

அது மிகவிரைவில் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும் - அவர் சொன்னார்.

ஜோன் மெக்கிலாஸ்கி இப்போது சுமாத்திராத் தீவுப்பகுதியில் ஏற்படும் நிலநடுக்கங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட முதலாவது நிலநடுக்கத்தின்போது ஆழிப்பேரலைகள் ஏற்பட்டு இந்து சமுத்திர நாடுகளைத் தாக்கியது. இரண்டாவதாக ஏற்பட்ட மிகப்பெரிய நில நடுக்கம் ஆழிப்பேரலைகளை ஏற்படுத்தலாம் என்ற அபாயம் இருந்தது. ஆனால், பூமியின் சுழற்சிப் பாதை கீழ்நோக்கி நகர்ந்துவிட்டதால், ஆழிப் பேரலைகள் ஏற்படவில்லை.

- இவ்வாறு பிரிட்டனின் மற்றொரு புவிச் சரிதவியல் நிபுணர் டேவிட் பூத் தெரிவித்தார்.

மூன்றாவது பூகம்பத் தாக்குதல் கூடிய விரைவில் - ஏற்படும் என்றும் -

அது மூன்று மாதகாலத்திற்குள் நிகழக் கூடும் என்றும் - நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில், சென்னை தமிழகக் கடலோரப் பகுதிகளையும் மற்றும் ஏனைய இந்து சமுத்திர நாடுகளின் கரையோரப் பகுதிகளையும் தாக்குமா என்ற அச்சமும் எழுந்துள்ளது.

மூன்றாவதாக ஏற்படும் நிலநடுக்கத்தின் போது ஆழிப்பேரலைகள் உருவாகுமா என்பது குறித்த ஆய்வுகளில் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். (8)

# 70 தூதரக அதிகாரிகளை திருப்பி அழைத்தது கென்யா

## செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

வெளிநாட்டில் உள்ள தூதரகங்களால் ஏற்பட்டுள்ள அதிக செலவு மற்றும் கடனைக் குறைகும் வகையில் பல்வேறு தூதரகங்களில் பணியாற்றும் 70 பேரைத் திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது கென்ய அரசு.

இதன் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசுக்கு 18.45 கோடி இந்திய ரூபாய்கள் செலவு குறையும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதைக் கென்யா அரசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது 38 நாடுகளில் கென்யாவின் தூதரகங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் பணியாற்றும் 70 பேர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், தூதர்கள் எவரும் திருப்பி அழைக்கப்படவில்லை.

பல்வேறு நாடுகளில் உள்ள தூதரகங்களில் சம்பளம், வாடகை, இதர படிகள் உள்ளிட்டவை சில காலமாகத் தரப்படாததால், தூதரகம் தர வேண்டிய நிலுவைத் தொகை அதிகமாகியுள்ளது. விரைவில் இது சீராகும் என்று அந்த அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார்.

கென்யா தற்போது வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களுக்காக ஆண்டுக்கு 200.25 கோடி இந்திய ரூபாய் செலவழிக்கிறது. அதை 273.6 கோடி இந்திய ரூபாவாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

திருப்பி அழைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உள்நாட்டிலேயோ அல்லது தேவைப்படும் நாடுகளிலேயோ பணியமர்த்தப்படுவார்கள் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (8)

# விமான முகப்புக்கொண்ட ஏரோ – டைனமிக் ரயில்கள்

## ஐ.சி.எவ். நிறுவனம் தயாரிக்கிறது

சென்னை,மார்ச்31

சென்னையில் உள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலை (ஐ.சி.எவ்) மேலும் 2 விமான முகப்புக் கொண்ட (ஏரோ - டைன மிக்) ரயில்களைத் தயாரிக்கிறது.

இருபுறமும் விமான முகப்புகொண்ட டீசலில் இயங்கும் ரயில்களைக் தயாரிக்கும் பணியை ஐ.சி.எவ். மேற்கொண்டுள்ளது.

இதுவரை ஐ.சி.எவ். நிறுவனம் மூன்று ஏரோ - டைனமிக் ரயில்களை தயாரித்துள்ளது. ஒரு ரயில் தென்மத்திய ரயில்வேயிலும் (விஜய வாடா கோட்டம்), மற்றொன்று வடக்கு ரயில் வேயிலும் இயக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே தயாரித்து அளிக்கப்பட்ட ரயில்களில் மேலும் சில மாற்றங்களுடன் 2 ரயில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் 4 மாதங்களில் பூர்த்தியடையும் என்றும் ஐ.சி.எவ். அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் ஒரு ரயில் கிழக்கு ரயில்வேக்கு அளிக்கப்பட உள்ளது. இதுவரை ஐ.சி.எவ். நிறுவனம் 35 ஆயிரம் ரயில் பெட்டிகளை தயாரித்து இந்திய ரயில்வே துறைக்கு அளித்துள்ளது.

சமீபத்தில் சுற்றுசூழல் மேலாண்மைக்கான ஐ.எஸ்.ஓ. 4001 சான்றிதழையும் பெற்றுள்ளது. டி.யூவி.நிறுவனம் அளித்துள்ள சான்றிதழை ரயில்வே வாரிய இயந்திரவியல்துறை உறுப்பினர் பி.என்.கார்க் பெற்றுக்கொண்டார். (8)

# அணைக்கட்டு உடைந்ததால் ஆப்கானில் ஆறு பேர் மரணம்

காபூல்,மார்ச்31

ஆப்கானிஸ்தானில் தென்கிழக்குப் பகுதியில் உள்ள அணைக்கட்டு ஒன்று உடைந்து ஏற்பட்ட வெள்ளத்தால் ஆறுபேர் உயிரிழந்தனர். அதிக எண்ணிக்கையானோர் காணாமற் போயுள்ளனர் என்று ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானின் வடகிழக்கு மாகாண காஸ்னிக்கு 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுல்தான் அணைக்கட்டே மேற்படி உடைந்து வெள்ளம் ஏற்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அணைக்கட்டு உடைவினால் நூற்றுக் கணக்காக ஏக்கர் நிலங்கள் கழுவப்பட்டு சென்றுள்ளன எனவும் -

நூற்றுக்கணக்கான கடைகள் உடைந்துள்ளன எனவும் - காஸ்னி மாகாண ஆளுநர் அஸ்ருல்லா காலித் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து செய்தியாளர்களுக்கு தெரிவித்ததாவது:-

அணைக்கட்டு உடைவினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மேலும் பலர் உயிரிழந்திருப்பர் என்றும் - உயிரிழந்தவர்களின் தொகையை உறுதியாகச் சொல்லமுடியாதுள்ளது என்றும், பிரதான பாதைகள் அனைத்தும் வெள்ளத்தினால் நிரம்பியுள்ளன என்றும் அதிகாரிகள் அறிவித்தனர்.

அண்மைக் காலங்களில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளம், மழை, பனிப்பாறைகள் உருகியதனால் ஆறுகளில் ஏற்பட்ட அதிக நீர் என்பவற்றின் காரணமாக இருநூறுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மத்திய மாகாணமான உருஸ்கானிலும் நூற்றுக் கணக்கான வீடுகள் உடைந்துள்ளன. அதிக எண்ணிக்கையான மக்கள் காணமற்போயுள்ளனர்.

அத்துடன் ஆப்கானின் தென்மாகாணங்களான பாரா மற்றும் ஹெறாட் ஆகியவையும் பெரிதளவு பாதிக்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகளுக்கான நான்கு ஹெலிகொப்டர்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் நிலைமையைக் கண்டறிந்து நிவாரணப் பணிகளை வழங்க மூன்று அமைச்சர்களை அனுப்பியுள்ளார் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (8)




# மனித ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்க மருந்து ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

லண்டன்,மார்ச்31

ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கச் செய்யும் புதிய மருந்து ஒன்றை ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனிதரின் வாழ்நாளை அதிகரிப்பதற்காக விஞ்ஞானிகளும், மருத்துவர்களும், காலம்காலமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதுவரை எவருக்கும் இதில் வெற்றி கிட்டவில்லை. இப்போது அந்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது.

ஸ்கொட்லாந்து நாட்டின் அபேர்தீன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கும் மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றி அந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜான்ஸ்பீக்மேன் கூறுகையில், நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை சாப்பிட்டால் அது அவரை ஆரோக்கியமாக இருக்கச் செய்கின்றது. நீண்ட நேரம் உழைப்பதற்கு உதவுகிறது. ஆயுளை 30 ஆண்டுகள் நீடிக்கச் செய்கிறது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:

உயிரினங்களிடம் ஏற்படும் இரசாயன மாற்றத்தை மாற்றுவதன் மூலம் செல்களுக்கு வயதாவதைக் குறைக்க முடியும்.

இரசாயன மாற்றத்தின் வேகத்தை அதிகரிப்பதன் மூலம் வாழ்நாளை அதிகரிக்கச் செய்யமுடியும்.

இந்த வேலையைச் செய்வதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது சோதனை முறையில் ஒரு எலிக்குக் கொடுக்கப்படும். அடுத்த 4 ஆண்டுகளில் எலி அதிக காலம் உயிருடன் இருக்க அந்த மருந்து உதவுகிறதா என்று கண்காணிக்கப்படும். சோதனை முடிந்த பிறகு, இந்த மருந்து விற்பனைக்கு வரும். மனிதர்கள் எந்த வயதில் இந்த மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விஞ்ஞானிகள் பரிசீலனை செய்துவருகிறார்கள் - என்றார். (8)

# ஒரே தீவுக்கு உரிமை கோருகின்றன ஜப்பானும் தென் கொரியாவும்

தென் கொரியா - ஜப்பான் இடையே உள்ள ஒரு தீவுக்கு 2 நாடுகளும் உரிமை கோருகின்றன. இதனால், பிரச்சினையை பன்னாட்டு அளவில் கொண்டு சென்று தனக்கு ஆதரவு தேட தென்கொரியா முயற்சி செய்துள்ளது. ஜப்பானில் அந்தத் தீவுக்கு மகேஷிமா என்றும் தென் கொரியாவில் டோக்டா என்றும் பெயர், மனித நடமாட்டமே இல்லாத தீவில் மீன் வளம் அதிகம் உள்ளது.

இந்தத் தீவைப் பெறுவதற்காக ஜப்பானுடன் போர் நடத்த தென் கொரியா தயாராக உள்ளது என கொரிய ஜனாதிபதி மூ யூன் அறிவித்திருக்கிறார். அதற்காக ஜப்பானில் உள்ள தூதரை உடனடியாக நாடு திரும்பும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. (க)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 666 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 29-3-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4381490 - 4397649 |

லக்கினம் கும்பம்

வெற்றி இலக்கங்கள்

**25 36 42 52**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 17,94,500/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,55,786 | 10/- | 35,57,860/- |
| 2.இலக்கங்கள் | 32,660 | 20/- | 6,53,200/- |
| 1.இல + லக்கினம் | 32,378 | 30/- | 9,71,340/- |
| 2.இல + லக்கினம் | 3,040 | 100/- | 3,04,000/- |
| 3.இலக்கங்கள் | 875 | 500/- | 4,36,500/- |
| 3.இல + லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,24,829 | - | 78,85,150/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,85,150/-

தொடர் இல. 5343016 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4393514-7-63
4386597-4-14
4384462-9-70
4393427-2-69
4388464-1-36


# மரண அறிவித்தல்கள்

## விக்கினேஸ்வரன் சிறிகுமார்

(கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்)



கோண்டாவில் கிழக்கு, கொட்டைக்காடு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் சிறிகுமார் 28-03-2005 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் மற்றும் யோகராணி தம்பதியினரின் மூத்த புதல்வனும் தயாலக்சுமியின் அன்புக் கணவரும் தயாபரன், சிறிகரன், குகபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுமார், மோகனதாஸ (லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் கமலினி (நோர்வே), செல்வமலர், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தகுமார் (நோர்வே), சசிரூபன் (யாழ் பல்கலைக்கழக ஆய்வுகூட உதவியாளர்), ஜீவானந்தன் (லண்டன்), தாரணி, தயாளினி, தயாவதி, தயாரூபி, தயானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தயாச்செல்வி, தயாஜோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டைக்காடு வீதி,*
*கோண்டாவில் கிழக்கு*
*கோண்டாவில்.* (43692)(33-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## விஸ்வப்பிரம்மஸ்ரீ

## துரையப்பா சண்முகராஜா

(ஓய்வுபெற்ற சிற்றுயிரியல் ஆய்வாளர், வவுனியா - Retired Regional Entomalogical Asst. Vavuniya)



யாழ். வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 45, ஐ.பி.சி.றோட், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சண்முகராஜா அவர்கள் நேற்று (30.03.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பாபத்தர் - தங்கம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற வாமதேவா மற்றும் கண்மணி ஆகியோரின் அன்பு மருமகனும் இன்பஜோதியின் அன்புக் கணவரும் லோஜினி (சுவிஸ்), கிரிஷாயினி (கனடா), ஷாமினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவேந்திரன் (சுவிஸ்), விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் அனித்தா, விதுர்ஷா (சுவிஸ்), ஜயிஷன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் கேசாவில் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32, கேசாவில் பிள்ளையார் கோயில்,*
*வண். வடமேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (43699)(33-16-18)

தகவல்:
தவேந்திரன் லோஜினி
(மகள்)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மார்ச்31

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, வாரந்தோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் யோ.சுதாகரன் 'தமிழ்க் கிழவி முருகன்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

இந்நிகழ்வு பேரவைத் தலைவர் க. அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும். (ஒ-173)

## செயலணிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்31

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் இயங்கும் காணிச் செயலணிக்குழுவிற்கான பயிற்சிநெறி இன்று காலை 10 மணிக்கு திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபையின் விருந்தினர் விடுதியில் ஆரம்பமாகிறது. இதில் காணி உரிமைகள் குறித்த பிணக்குகளும் தீர்வுகளும் பற்றி பயிற்சியளிக்கப்படும். (ஒ)

## வருமான மேற்பார்வையாளரின் குறைதீர்க்க நடவடிக்கை

தென்மராட்சி,மார்ச்31

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமான மேற்பார்வையாளர்களின் குறைகளை உடனடியாக நிவர்த்திசெய்யும் வகையில் மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர் வருமான மேற்பார்வையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வருமான மேற்பார்வையாளர்களுக்கு சேவை மூப்பு அடிப்படையில் பதவியுயர்வு மற்றும் சம்பள முரண்பாடு போன்ற குறைகளை உடனடியாக நிவர்த்திசெய்ய மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அவர்கள் கூறினர்.

மேற்படி சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் மாகாண ஆளுநரைச் சந்தித்துக் குறைபாடுகளை எழுத்துமூலம் சமர்ப்பித்தனர். அவ்வேளையிலேயே குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் உடனடி நடவடிக்கை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் த.நிர்மலானந்தன், உள்ளூராட்சி மன்றத் தொழிற்சங்கங்களின் ஒன்றிய வடக்கு - கிழக்கு இணைப்பாளர் செ. சந்திரகுமார் ஆகியோரே அண்மையில் ஆளுநரைச் சந்தித்தனர். (ஒ-117)

## மகளிர் மேம்பாட்டு செயலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்31

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவில் மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றியத் தலைமைச் செயலகத் திறப்பு விழாவும், ஒன்றியத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர் சேவையில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை, மானிப்பாய் உடுவில் வீதியிலுள்ள ஒன்றிய வளாகத்தில் நடைபெற்றன.

ஒன்றிய நிறுவனத் தலைவர் எஸ்.ஜே. செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக முன்னாள் பேராயர் அருட்திரு. எஸ்.ஜெபநேசன், உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் சி.வி.செல்லையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒன்றியத்தின் தலைமைச் செயலகக் கட்டடத்தை அருட்திரு. எஸ்.ஜெபநேசன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், டி.ஆர். அருமைநாயகம், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.திருநாவுக்கரசு ஆகியோரின் சிறப்புரைகள் நடைபெற்றன.

25 ஆவது வருட ஆசிரியர் சேவையினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள், இலச்சினைகள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (ஒ-204)

# சேவை நலன் பாராட்டு விழா

## வலயக்கல்வி அலுவலகம், தீவகம்



திரு.தம்பிராசா தவராசா
உதவிக்கல்விப் பணிப்பாளர்
(முன்பள்ளி)
சேவைக்காலம்
27.12.1999- 19.03.2005



திரு.மகாதேவா ஜெயராமசர்மா
முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்
(தமிழ்)
சேவைக்காலம்
11.11.1998- 01.09.2000

தீவக வலயக்கல்வி அலுவலகத்தில் இடர்மிகுந்த காலம் முதல் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக சேவையாற்றி இளைப்பாறிச் செல்லும்.

1. திரு.தம்பிராசா தவராசா- உதவிக்கல்விப் பணிப்பாளர் [முன்பள்ளி]
2. திரு.மகாதேவா ஜெயராமசர்மா- முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் [தமிழ்]

ஆகியோருக்கு எங்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் பாராட்டு விழாவில் அவர்கள் இருவரும் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

**நலன்புரிக் கழகம்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**தீவகம், வேலணை.**

(43695) (33-16-18-39)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி கலைவாணி பாலசிங்கம் அவர்களின் பாசமிகு தந்தை

## கதிரித்தம்பி பாலசிங்கம்

அவர்கள் நேற்று (30. 03. 2005) புதன்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,*
*வதிரி, கரவெட்டி.* (43693)(33-16-18-35) பாடசாலைச்சமூகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்ரீ பத்மா கந்தையா (சரசு)

யாழ்ப்பாணம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்துவராகிய திருமதி ஸ்ரீ பத்மா கந்தையா (சரசு) அவர்கள் நேற்றுமுன்தினம் (29.03.2005) செவ்வாய்க்கிழமை லண்டனில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரியும் நாகமணி - சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் பண்டிதர் நாகமணி கந்தையாவின் அன்பு மனைவியும் சந்திரகுமாரி (லண்டன்), குமாரதாசன் (ஆஸ்திரேலியா), ஜெயதாசன் (நோர்வே), கண்ணதாசன் (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மயூரவரதன் (லண்டன்), தர்ஷினி, மல்லிகா, சித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் மதனரூபன், கிரிசாந்தன், காயத்திரி, பவித்திரா, பிரசன்னா, ஸ்ரெபனி, டனி, அஞ்சலி, சிந்துஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் North Chapel, Hendon Crematorium, Mill Hill என்னும் இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

*மேலதிகத் தகவல்களுக்கு:*
*மயூரவரதன் (லண்டன்)*
*0044 2089037626*
*0044 794656255*
*மதனரூபன் 0044 7958902721*
*மற்றும் -*
*த.சகாதேவன்,*
*46, பிரப்பங்குளம் லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி - 222 3520*

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(43677)(33-16-18)

## திருமதி பாலச்சந்திரன் யோகவதி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலச்சந்திரன் யோகவதி நேற்றுமுன்தினம் (29.03.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி பாலச்சந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தம்பதிகளின் மருமகளும் குலேந்திரராசா, யோகப்பிரகாசவதி, விமலாதேவி, கௌரீஸ்வரி ஆகியோரின் சகோதரியும் தேவகுமாரி, வரதராசா, பிரபாகரன், அருணகிரிராசா, ஸ்ரீகரன், ஸ்ரீரங்கன், ஜெயமுகுந்தன், நிர்மலா, சத்தியபாமா, பவானி காலஞ்சென்றவர்களான மனோரதி, சுரேசன் ஆகியோரின் மைத்துனியும் வசீகரன், துவாரகன், சொரூபிகா, சசிவதனன் ஆகியோரின் பெரியம்மாவும் தர்சிகாவின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*யோகா மருந்தகம்,*
*இணுவில் தெற்கு,*
*சுன்னாகம்.* (43696)(33-16-18)

தகவல்:
இ.பாலச்சந்திரன்
(கணவர்).

## ...க்குத் தாக்கலுக்கு ஏற்பாடு

...96 - 1997 ஆண்டு காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற் ...னாரில் 25 பேர் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு அன் ...ர் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.

...விடயம் தொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொள்ளும் முக ...சந்திப்பு ஒன்றை அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது. ...ச் சந்திப்பு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை பருத்தித்துறை ...ந்துள்ள அன்னையர் முன்னணியின் அலுவலகத்தில் நடை ...றும் - கைதாகிக் காணாமற்போனோரின் தாய, தந்தையர்கள் ...ம் இச்சந்திப்பில் கலந்துகொள்ளவேண்டும் என்றும்- அன்னை ...ியின் தலைவி திருமதி செ.கனகாம்பிகை கேட்டுள்ளார். (எ-12)

### ...ண்ணீர்ப் பூக்களைக் ...ணிக்கையாக்குகின்றோம்



...யபீடத்தின் பயிரியல்துறையின் வருகை விரிவு ...ளராகக் கடமையாற்றிய எமதருமை ஆசான்

**...றுமுகம் செந்திநாதன்**

...கள் 30.03.2005 அன்று திடீர் மரணமடைந்ததையறிந்து அளவில்லாத் ...டந்தோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ...ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

...அனைத்து மாணவர்களையும் பீடமுன்றிலில் காலை 9 மணிக்கு ...டுமாறு கேட்கப்படுகின்றனர்.

(C-41911)(29-16-18)

...யபீட மாணவர் ஒன்றியம், விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்

### துயர் பகிர்கிறோம்



விவசாயபீடத்தின் பயிரியல்துறையின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய

**ஆறுமுகம் செந்திநாதன்**

...வர்கள் 30.03.2005 அன்று மரணமானதை அறிந்து ஆழ்ந்த ...திர்ச்சியடைவதுடன், அவரது மறைவினால் துயருற்றிருக் ...ும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

(41704)(29-16-18)

விவசாயபீட ஊழியர் நலன்புரிச் சங்கம்.

### இதய அஞ்சலிகள்



30.03.2005 அன்று காலமான விவசாயபீடத்தின் பயிரியல் துறையின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய

**ஆறுமுகம் செந்திநாதன்**

(C-41910)(29-16-18)

...களின் மறைவால் துயருற்றிருக்கும் உள்ளங்களிற்கு எமது இதய ...லிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

...ம் அணி மாணவர்கள் , விவசாயபீடம், யாழ்.பல்கலைககழகம்.

### ...ண்ணீர் அஞ்சலிகள்



...2005 அன்று காலமான விவசாயபீடத்தின் பயிரியல் ...யின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய

**...றுமுகம் செந்திநாதன்**

...களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது ...பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள் ...றோம்.

14 ஆம், 15 ஆம் அணி மாணவர்கள்,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(C-41910)(29-16-18)

### கண்ணீர்க் காணிக்கைகள்



30.03.2005 அன்று காலமான விவசாயபீடத்தின் பயிரியல் துறையின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய

**ஆறுமுகம் செந்திநாதன்**

(C-41910)(29-16-18)

அவர்களின் மறைவினால் துயருற்றிருப்பவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துகின்றோம்.

...6 ஆம் அணி, மாணவர்கள் விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

### ...ண்ணீர்த் துளிகள்



...0.03.2005 அன்று காலமான விவசாயபீடத்தின் பயிரியல் ...துறையின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய

**ஆறுமுகம் செந்திநாதன்**

அவர்களின் மறைவினால் அதிர்ச்சியடைவதுடன் எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குக்கின்றோம்.

17 ஆம் அணி மாணவர்கள்,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(C-41910)(29-16-18)

### துயர் பகிர்வில்



30.03.2005 அன்று காலமான விவசாயபீடத்தின் பயிரியல்துறையின் வருகை விரிவுரையாளரான

**ஆறுமுகம் செந்திநாதன்**

(C-41910)(29-16-18)

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரது குடும்பத் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

பயிரியல் சிறப்புப்பிரிவு மாணவர்கள்
13 ஆம் அணி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

### அஞ்சலி செலுத்துகின்றோம்

எங்கள் ஆசிரிய மாணவர் திரு.கிட்ணபிள்ளை இந்திரன் அவர்களின் அன்புச் சகோதரன்

**மேஜர் புகழமுதன் (கிட்ணபிள்ளை சிவநேசன்)**

அவர்கள் வீரச்சாவடைந்த செய்தியறிந்து துயருறுகின்றோம். அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி பிரிவால் துயருறும் குடும்பத்தவர் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

கோப்பாய்
ஆசிரிய கலாசாலைச் சமூகம்.

(43697)(38-29-16-18)

## எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்
## பல்கலை, பாடும்மீன் அணிகள் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்31

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் யாழ்பல்கலைக்கழக அணியும் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணப பல்கலைக்கழக அணியும் யாழ். லீக்கைச் சேர்ந்த சென்.மைக்கல் அணியும் மோதிக்கொண்டதில் பல்கலைக்கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.லீக்கைச் சேர்ந்த பாடும்மன் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டதில் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றைய ஆட்டத்தின் இரு ஆட்டங்களின் வெற்றி தோல்வியும் சமநிலை உடைப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-86)

## யாழ்.நகரில் ஞாயிறன்று நற்கருணைப் பேரணி

நற்கருணை ஆண்டையொட்டியும் நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தியும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். நகரின் வீதிகளூடாக நற்கருணைப் பேரணி இடம் பெறவுள்ளது.

நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்திலிருந்து புறப்படும் நற்கருணைப் பேரணி அஞ்சனத்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தையடைந்து, அங்கிருந்து கஸ்தூரியார் வீதி, ஆஸ்ப்த்திரி வீதி வழியாக யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் முடிவடையும். அங்கு விசேட நற்கருணை வழிபாடுகளும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும். (எ-30)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'சமய நெறிகாட்டும் வாழ்வியல்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. இந்தச் சொற்பொழிவினை ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம் வடிவேலு நிகழ்த்துவார். (எ-78)

### தாதி தேவை

எமது வைத்திய நிலையத்திற்கு பெண் தாதி தேவை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம். அண்மையில் உள்ளவர் விரும்பத்தக்கது. விவரங்களுக்கு நேரில்வரவும்.

**முருகானந்தா வைத்திய நிலையம்**

கண்டி வீதி, மாம்பழம்சந்தி.
T.P. : 077 6284687

(43705)(29-16-18)

### நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய் திரிஷா நடித்த

**கில்லி** (ரீஸ்)

கா.நேரம்: 11.00 2.45. 6.00. (பு.நே)

(C/41377)(29-16-17)

### நாதன்ஸ் சினிமா

சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த

**ஏய்** (ரீஸ்)

கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)

விரைவில் **குருதேவா**

(C/41480)

### ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

**லண்டன்** (ரீஸ்)

இயக்கம்: சுந்தர் C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)

(C/41381)(29-16-17)

### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சூர்யா, ஜோதிகா நடித்த

**மாயாவி** (ரீஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே.)

(C/41380)(29-16-17)

### மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்தீபன், காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த

**கண்ணாடி பூக்கள்**

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (ரீஸ்)

(C/41378)(29-16-17)

### VESTA

## உடனடி வேலைவாய்ப்பு

எமது தொழிற்சாலையில் உற்பத்திப் பொருள்களைப் பொதிசெய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

உடன் நேரில் சமுகந்தரவும்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை
(ஆண்களுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்பும் உண்டு)

**வெஸ்ரா இண்டஸ்ரீஸ்**

குளப்பிட்டி வீதி, உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
T.P. : 021 4591372

(43702)(29-16-18)

### கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தில் கடமைபுரியும் செந்தூரனின அன்பு மாமனார்

**ஆறுமுகம் செந்திநாதன்**

அவர்கள் 30.03.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

*ஆத்மசாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.*

மிலேனியம் பசன் அன் பொம்பே பசார்
உரிமையாளரும் சக ஊழியர்களும்

*இல.10, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.* T.P. : 0214590174

(43706)(29-16-18)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் செந்திநாதன்

(இளைப்பாறிய வடபகுதி விவசாய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர், வருகை விரிவுரையாளர் - விவசாயபீடம், யாழ்ப்பாணம்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செந்திநாதன் அவர்கள் 30.03.2005 அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் கௌரியின் அன்புத் துணைவரும் ஜெனனி, கஜனி (உயர்தர மாணவி, கொழும்பு சைவமங்கையர்க் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரனின் (Gesner Company area manager) அன்பு மாமனாரும் குலசிங்கம் சரோயினிதேவியின் அன்பு மருமகனும் அமரர் குமரகுரு, ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும் ஜெயதேவா (கனடா), தர்மதேவா (ஓமான்) ஆகியோரின் மைத்துனரும் சண்முகநாதன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), குகநாதன் (சுவிஸ்), வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆறுமுகன் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கணேசநாதன், யசோதை ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமகன்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (43707)(29-16-18)

### திருமதி செல்லத்துரை மகேஸ்வரி

வதிரியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரி நேற்று (30.03.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் உதயகுமார் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம்), விஜயகுமார் (ஹொலண்ட்), சிவகுமாரி, சத்தியபாமா, மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உதயகுமார் (மகன்).

*விக்னேஸ்வரக் கல்லூரி வீதி,*
*கரவெட்டி.* (சி-41909)(29-16-18)

### கந்தையா விஜயரட்ணம்

(மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர்- MLT, மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை)



தெல்லிப்பழை, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஜயரட்ணம் நேற்று (30.03.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மூத்ததங்கத்தின் இளையமகனும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - காமாட்சிப்பிள்ளையின் மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் தயாவதி, குறிஞ்சிக்குமரன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிறீஸ்கந்தராஜாவின் அன்பு மாமனாரும் திருமதி செல்லம்மா இராஜரட்ணம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் திருமதி சரஸ்வதி சண்முகநாதன், திருமதி பரமேஸ்வரி கனகசபை, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், மகேஸ்வரி மயில்வாகனம் மற்றும் விநாயகமூர்த்தி, திருமதி அன்னலட்சுமி தருமலிங்கம், திருமதி மனோன்மணி விமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் திருமதி ஞானசவுந்தரி பாலசுப்பிரமணியம், கனகசபை, மயில்வாகனம், சர்வேஸ்வரி, தர்மலிங்கம், காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் சண்முகலிங்கம் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2005) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நகுலேஸ்வரி (மனைவி).

*அருளானை,*
*பன்னாலை, தெல்லிப்பழை.* (43700(29-14-17)

## மிக விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணருக்கு வெற்றிடம் உள்ளது. அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு வரவிரும்பினால் அதற்கு நாம் தடையானவர்கள் அல்லர். அவ்வாறு செய்யின் நாம் அவரை வரவேற்போம்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு துறைசார்ந்தோர் உள்ளனர். அவர்கள் அந்தந்தத் துறைகளைப் பொறுப்பேற்று நடத்துவதுதான் சிறந்தது. ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் வேறொரு துறையை நடத்த ஏற்புடையதன்று. இதனால், பல்வேறு சட்டப்பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். இதன் காரணமாகவே நாம் சத்திரசிகிச்சை நிபுணர் குணானந்தன் நரம்பியல் சத்திரசிகிச்சையை மட்டும் செய்யவேண்டுமெனக் கோருகின்றோம். அல்லது அவர் பல்கலைக்கழக இறுதியாண்டு மருத்துவ மாணவர்களுக்கான கல்வியைத் தொடர்ந்து கொண்டு அதேவேளை - போதனா வைத்தியசாலையின் விடுதியிலுள்ள நோயாளர்களையும் பார்வையிடவேண்டும். ஆனால், அதற்கு அவர் மறுத்துவருகிறார். மருத்துவ மாணவர்களுக்கான கல்வியை சத்திரசிகிச்சை நிபுணர் குணானந்தன் கற்பிக்க வேறொரு வைத்தியர் நோயாளிகளைப் பார்வையிடுவதென்பது பொருத்தப்பாடனதல்ல. இதன் மூலம் முன்னர் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதனாலேயே நாம் இதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பது எமது கடமையல்ல. இருந்தும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் நாம் இதனைச் செய்துவருகின்றோம்.

பல்கலைக்கழப் பேரவையினால் அமைக்கப்பட்ட நடவடிக்கைக்குழு சத்திரசிகிச்சை நிபுணர் குணானந்தன் விடயம் தொடர்பாக சில உறுதிமொழிகளை எமக்கு வழங்கியுள்ளது. எனவே, அதனடிப்படையில் நாம் விரைவில் சத்திரசிகிச்சைக் கற்கை நெறிகளை ஆரம்பிப்போம் - என்றார்.

அந்த உறுதி மொழிகள் பற்றிய விவரத்தைச் சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் வெளியிடவில்லை. (ஏ-8)

## யாழ். மருத்துவபீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தின் இறுதியில் சத்திரசிகிச்சைக் கற்கைநெறியை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து உறுதிமொழி வழங்கப்பட்டதாக துணைவேந்தர் எமக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, மருத்துவபீட மாணவர்கள் இன்று வியாழக்கிழமை முதல் விரிவுரைகள், விடுதி வகுப்புகளுக்குத் திரும்புவர் என மருத்துவ பீடாதிபதிக்கு நாம் அறிவித்துள்ளோம். எனவே, சகல மாணவர்களையும் இன்று முதல் விரிவுரைகளுக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (ஏ)

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்கு விற்பனை விவகாரம் குறித்து எந்த விடயமும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை.

கொழும்புத் துறைமுகத்தின் ஜயா இறங்குதுறையை சிங்கப்பூர் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்குதல், தேசிய உப்புக் கம்பனியை தனியார் மயப்படுத்தல் போன்ற யோசனைகள் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டபோதும், அவை நிறைவேற்றப்படவில்லை. அவற்றை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பிலும், நிவாரண புனர்வாழ்வுச் செயற்பாடுகளின் தாமதம் குறித்தும் அமைச்சரவை விரிவாக ஆராயந்தது.

இந்தப் பணிகள் ஏப்ரல் மூன்றாம் திகதியிலிருந்து துரிதகதியில் அமுல்படுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் தலையிட்டுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு நிதியமைச்சர் அமுனுகமவைப் பணித்த ஜனாதிபதி பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுள்ளார் எனத் தெரிகின்றது. (ஏ-க)

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவைப் பணித்திருக்கிறார் எனவும் -

அதேவேளை, மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியத்துறை பங்குவிற்பனை தொடர்பான நிலைப்பாட்டை தொழிற்சங்கங்கள் மாற்றிக்கொள்ளாவிட்டால் முன்னர் திட்டமிட்டபடி அமைச்சரவையில் இதனை நிறைவேற்றியே தீருவது என்பதில் அரசு உறுதியாகவுள்ளது எனவும் -

ஜனாதிபதி மாளிகையின் நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை, இந்த விடயங்கள் தொடர்பான அரசின் கொள்கைக்கு எதிரான தமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லையென்றுமின்சார மற்றும் பெற்றோலியத்துறைத் தொழிற் சங்க வட்டாரங்கள் நேற்று உறுதியாகத் தெரிவித்தன.

பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை மற்றும் மின்சாரசபை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஜே.வி.பியினரின் எதிர்ப்பை அரசு பொருட்படுத்தப் போவதில்லையென்று மின்சக்தி, எரிபொருள்துறை பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஏ-க)

## ஈ.பி.டி.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிற்பகல் ஒரு மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. ஈ.பி.டி.பி. இயக்க முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்பாக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சார்ஜன்ட் பெரேரா என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர் என்று ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

செங்கலடி இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. இயக்க அலுவலகத்தில் கடமைபுரியும் அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் ஆறுபேர் செங்கலடியில் இருந்து மட்டக்களப்புக்குச் சென்று திரும்பும் வழியில் ஆறுமுகத்தான் குடியிருப்புப் பிரதேசத்தில் வாகனத்தை வழிமறித்த இனம்தெரியாத ஆயுதபாணிகள் ரி-56 ரக தன்னியக்கத் துப்பாக்கிகளினால் சரமாரியாகச் சுட்டுள்ளனர் என்றும், கிரனேட்டையும் வீசினர் என்றும் பொலீஸார் கூறினர்.

இச்சம்பவத்தில் வாகனத்தில் பயணம் செய்த ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர்கள் மூன்று பேருக்குச் சிறுகாயம் ஏற்பட்டது.

சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஏ-க)

## பின்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகத்தின் ஆசியாவிற்கான தூதுவர்
பைகலா தலைமையிலான குழுவைப் புலி
பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பே

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெ
தூதுவர் மிக்கோ தெரிவிக்கையில்:-

ஆழிப்பேரலைக்குப் பிந்தைய நிவ
பணிகளுக்காக அரசு - புலிகள் இடை
பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்க
தைப் பின்லாந்து ஊக்குவிக்கிறது என்

இனியும் தாமதிக்காமல் பெ
மைப்பை உடனே செயற்படுத்த
என்றும் - கேட்டுக்கொண்டார்.

அமைதிப் பேச்சுக்களின் தற்போ
நிலைமை, யுத்த நிறுத்த உடன்படிக்
நடைமுறைப்படுத்துவதில் உள்ள கிச
டிசெம்பரில் தாக்கிய ஆழிப்பேரலை
பட்ட பெரும் அழிவு, பொதுக்கட்டமைப்
வாக்கம் ஆகியன பற்றித் தமிழ்ச்செல்
லாந்துக் குழுவினருக்கு விளக்கினா

பின்லாந்தின் சர்வதேச விவகா
கான துறையின் இயக்குநர் கரி
மனிதாபிமான உதவிகளுக்கான ஆ
திமோ கர்மாக்லியோ மற்றும் பின்லாந்
சிலுவைச் சங்கத் திட்ட அலுவலர் திருமதி
ஜான்பெர்க் ஆகியோரும் இந்தச் சந்
போது உடனிருந்தனர்.

## ஜி.சீ.ஈ.சாதாரணதர

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன எனவும் - அடுத்த வா
கிழமையளவில் பெறுபேறுகள் வெளி
மெனவும் - பரீட்சைகள் திணைக்களத்
காரியொருவர் தெரிவித்தார். பரீ
திணைகளத்தின் www.doen
என்ற இணையத்தளத்திலும் பரீட்
பெறுபேறுகள் வெளிவரும். அதேசமய
சாலை அதிபர்களுக்கும் தபால் மூலம்
கள் அனுப்பப்படுமென்றும் - அந்த
மேலும் குறிப்பிட்டார்.

## சுனாமி முத்திரை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தற்குச் சம்மதித்துள்ளார் என்றும் -
லாளர் தரப்பில் கூறப்பட்டது. (எ

# இலங்கை அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளின் விவரங்கள் குறித்தும் கூட அந்த முறையீட்டில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸில் தலைமையகத்தைக் கொண்டு இயங்குகின்றது. அதனால், ஐ.நாவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவில் அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு மூன்று வருடங்களாகிவிட்டன. இன்னும் அங்கு எந்தவித சுமுகமான நிலையும் உருவாகவில்லை.

போர்நிறுத்த உன்படிக்கையில் கூறப்பட்டது போல், இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் தங்கள் வசிப்பிடங்களுக்குத் திரும்பமுடியவில்லை. இராணுவம் தொடர்ந்தும் மக்களை துன்புறுத்துவதுடன், உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறித் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மக்கள் குடியிப்புகள் அடங்கிய பல பெரிய பிரதேசங்களை இராணுவ மயமாக்கியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போர்க்காலத்தில் இருந்து இராணுவத்தினரை விட பலமடங்கு இராணுவத்தினர் தற்பொழுது உள்ளார்கள். கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் இராணுவத்தின் உதவியுடன் அவர்களுடன் சேர்ந்தியங்கும் கூலிப்படைகளினால் அரசியல் படுகொலைகள் தொடர்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை மக்களின் வாழ்க்கையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. ஆழிப்பேரலைத் துயரங்கள் ஒரு மனித உரிமை மீறல் சம்பவம் இல்லாவிடிலும், இலங்கைத்தீவின் வடக்கு - கீழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு எந்த வித மனிதாபிமான உதவியையும் செய்யாத காரணத்தால் அதனை ஒரு மனித உரிமை மீறலாகவே கருதவேண்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தினால் கொடுக்கப்பட்ட எந்த வித நிவாரணங்களோ, நிதி உதவிகளோ வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை.

இலங்கைத்தீவில் ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் வடக்கு - கிழக்கில் உள்ள அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களேயாகும். இம்மாவட்டங்களில் உடனடி மீட்பு வேலைகளை தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் இணைந்து செய்தனர்.

இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், வேறு சில அரச சார்பற்ற நிறுவனங்களினாலுமே நிவாரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

ஆனால், அரசு உண்மைக்குப் புறம்பான தகவல்களுடன் சர்வதேச பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

ஆழிப்பேரலை பாதிப்புகளை நேரில் பார்வையிட ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபொழுது அரசு கோபி அனானை வடக்கு - கிழக்கிற்குச் செல்லவிடாது தடுத்து நிறுத்தியிருந்தது.

அரசின் இந்தச் செயற்பாடு ஐ.நா. சபையின் அதிகாரப் பத்திரத்தின் சாரம் 100 ஐ மீறுவதாகவுள்ளது. இது மிகவும் கண்டனத்துக்குரியது. கோபி அனானைத் தொடர்ந்து வந்த பல நாட்டுத் தலைவர்களையும் வடக்கு - கிழக்கிற்கு விஜயம் செய்யவிடாது ஸ்ரீலங்கா அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. இது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா அரசு பெருந்தொகையான பணத்தைச் செலவழித்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து போருக்குத் தன்னைத் தயார்செய்கிறது.

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் மீதான அனுதாபம் சர்வதேச சமூகத்திற்கு இருந்தபோதும், அதை வெளிப்படையாகக் காட்டத் தயங்குவது மிகவும் கவலைதரும் விடயம். இதனாலேயே, அரசினால் தமிழ்மக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வருகின்றார் கள்.

இப்பொழுது நடை பெற்றுக் கொண்டிருக் கும் இந்தக் கூட்டத் தொடரினால், இலங் கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப் போல் சம னாக நடத்தப்பட வேண்டும் என்று ஒரு கண்டனத் தீர் மானத்தை நிறைவேற்றுமாறு உங்க ளைக் கேட்டுக்கொள் ளும் அதேவேளை, சர்வதேச சமூகத்திடம் நிவாரண உதவி களை வடக்கு - கிழக்கு மக்களுக்கு நேரடியாக அனுப்பிவைக்க வேண்டிக் கொள்ளுமாறும் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஏ-க-13)

# அரியாலை முகாமில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1996 - 1997 ஆண்டு காலப்பகுதியில் யாழ். கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய எஸ். செல்வரத்தினம் காணாமற்போனமை தொடர்பாக அவரது மனைவியான இராசமணி தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனுவும் -

அடையாள அட்டைத் திணைக்களத்தில் பணியாற்றிய லோகேஸ்வரன் சேரன் என்பவர் காணாமற்போனமை தொடர்பாக அவரது தந்தை காசிப்பிள்ளை லோகேஸ்வரன் தாக்கல் செய்த ஆள்கொணர்வுமனுவுமே விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது பிரதிவாதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்தார். அவர் சார்பில் சட்டத்தரணி நிரஞ்சன் ஆஜரானார்.

காசிப்பிள்ளை லோகேஸ்வரன், இராசமணி செல்வரத்தினம் ஆகியோரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதியான ராஜபக்ஷவும் 2ஆவது பிரதிவாதியான லலித்குமார என்ற முகாம் பொறுப்பதிகாரியுமே தமது உறவுகளைக் கைதுசெய்தனர் என்றும் -

பின்னர் அவர்கள் அரியாலை புங்கன்குளம் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுப் பின்னர் காணாமற்போனார்கள் என்றும் - இருவரும் தமது சாட்சியங்களில் தெரிவித்தனர். அவர்களது சாட்சியத்தை முழுமையாக ஏற்பதாக ராஜபக்ஷ அப்போது நீதிவானிடம் தெரிவித்தார்.

சாட்சியம் அளித்தவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லைஎன்று ராஜபக்ஷ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் இராணுவத் தளபதி
வடக்கு கட்டளைத் தளபதி ஆகியோ
2ஆம், 3ஆம், 4ஆம், பிரதிவாதிக
ஆஜரான இராணுவச் சட்ட ஆலோச
சல்காது, தமது தரப்பினர் சார்பில்
விசாரணைசெய்ய அரச சட்டவாதி சு
கிரமாட்சி அடுத்த தவணையில் நீதி
சமுகமளிப்பார் எனவும் -

அதற்கு அனுமதி தருமாறும் - கோ

இந்த வழக்குகள் மீதான விசாரணை
மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்

மேலும் நான்கு ஆள்கொணர்வு
கள் மீதான விசாரணைகள் இன்றும்
யும் இடம்பெறவுள்ளன.

அதற்கு வசதியாக ராஜபக்ஷவை யாழ்.
யில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்

இவ் வழக்கின் பிரதிவாதிகளுள் ஒருவ
இராணுவக் கோப்ரலான ராஜபக்ஷ மு
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாண
ஷாந்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படு
டுக் கொலைசெய்யப்பட்டமை மற்று
ஷாந்தியின் தாயார், சகோதரர், அயல
யோர் கொலை செய்யப்பட்டமை தொட
வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு ம
தண்டனை விதிக்கப்பட்ட கைதி என
குறிப்பிடத்தக்கது.

(ஐ-3-7

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பிரதேச செயலகம், கல்முனை மாநகரசபை, கல்வி அலுவலகம் போன்றவை மூடப்பட்டிருந்தன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் எவையும் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள், கடைகள்பூட்டப்பட்டிருந்தன.

கல்முனை - மட்டக்களப்பு, கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை போன்ற பாதைகளில் போக்குவரத்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன. நாவிதன் வெளிப் பிரதேசத்தில் வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (ஏ-க-13)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா செல்லம்மா

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா செல்லம்மா அவர்கள் நேற்று (30.03.2005) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் செல்லையாவின் (மெக்கானிக்) அன்பு மனைவியும் உமா (பிரான்ஸ்), இந்திரன் (பிரான்ஸ்), சுரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P.: 0777 715034

தகவல்:
செல்லையா (கணவர்),
பிள்ளைகள்.

(43707)(38-16-18)


உ

**இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்**

புனருத்தாரண மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

**சிறுவர் நூலகம் திறப்பு விழா**

பரிசில் வழங்கல் வைபவமும் நூல்கள் அன்பளிப்புச் செய்யும் வைபவமும்

இடம் : இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்
காலம் : 31.03.2005 வியாழக்கிழமை பி.ப. 4.00 ம
தலைவர் : திரு.அ.கிரிதரன் (இணுவில் பொதுநூலகம்

பிரதம விருந்தினர்:
திரு.கந்தையா அரியநாயகம்
(நீதிபதி மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.)

சிறப்பு விருந்தினர்:
திரு. தி.அருட்பிரகாசபிள்ளை
(அதிபர், மானிப்பாய் சோதிவேம்படி மகாவித்தியா
திருமதி ஸ்ரீ காந்தலட்சுமி சிவநேச
(கல்விசார் நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்)

இன்னிசை விருந்து (யாழ்.விழிப்புலனற்றோர் சங்க

இணுவில் பொதுநூலக
இணுவில். (C-41912)(38-16-18) சனசமூக நிலையம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.200 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.